Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 சித்திரை-22 05-05-2005 வியாழக்கிழமை ஓசை 76



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-11902) விநாயகர் வீதி, மயிலிட்டி.

# பெரும் துரோகத்தைத் துணிந்து நின்று முறியடித்த ஆற்றல்மிகு படையணி!

## தேசியத்தலைவர் ஜெயந்தன் படையணிக்கு புகழாரம்



(நமதுநிருபர்)

**மட்டக்களப்பு மண்ணிலே எமது போராட்டத்திற்கு எதிராகப் பெரும் துரோகம் நிகழ்ந்தபோது சரியான நேரத்தில், சரியான இடத்தில் துணிந்து நின்று துல்லியமாகத்தாக்கி துரோகத்தை முறியடித்ததுடன் எமது மண்ணையும், எமது மக்களையும், எமது போராளிகளையும் மீட்டெடுத்து எமது விடுதலைப் போராட்டத்தை பேரழிவில் இருந்து காத்தது ஜெயந்தன் படையணி என தேசியத்தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

ஜெயந்தன் படையணியின் பன்னிரெண்டாவது வருட நிறைவை முன்னிட்டு வெளியிடப்பட்ட இவ்வாழ்த்துச் செய்தியின் முழு விபரமும் வருமாறு.

ஒரு போரின் போக்கை நிர்ணயிப்பது தனியாக ஆயுதப்பலமோ அல்லது ஆட்பலமோ அல்ல. மிகவும் நுட்பமாக தீட்டப்படும் போர்முறைத் திட்டங்களும் அந்தத் திட்டங்களை சாதுரியமாக செம்மையாக செயற்படுத்துகின்ற படையணிகள்தான் போரின் தலைவிதியை தீர்மானிக்கின்றன. இந்த வகையில் ஜெயந்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தேசியத்தலைவருக்கு துணையாகச் செயற்பட்டவரை தேசம் இழந்துவிட்டது

### நாட்டுப்பற்றாளர் க.குலசேகரம் குறித்துப் புலிகள்

நாட்டுப்பற்றாளர் கந்தையா குலசேகரம்அவர்கள் காலமானார் அன்னாருக்கு விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப நாட்களில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் உருவாக்கத்தில் ஈடுபட்ட எமது தேசியத் தலைவருக்குப் பக்கத்துணையாக நின்று பங்காற்றியவர்களுள் ஒருவரைத் தமிழீழ தேசம் இன்று இழந்து நிற்கிறது. மனித நேயத்திலும், அன்பு, பண்பு, அறிவு, கொள்கை, தேசப்பற்று என்பவற்றிலும் சிறந்து விளங்கிய யாழ்ப்பாணம் உரும்பிராயைச் சேர்ந்த திருவாளர் கந்தையா குலசேகரம் அவர்கள் கடந்த இரண்டாம் திகதி அன்று எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார் என விடுதலைப்புலிகளின் அரசியல்துறை தெரிவித்துள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பு அமைக்கப்படாது போனால் பாரிய அரசியல் மாற்றங்கள் உருவாகும்

### -தமிழ்தேசியக் கூட்டமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

ஜே . வி. பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றின் எதிர்ப்புக்களை பொருட்படுத்தாது சனாதிபதி பொதுக்கட்டமைப்பை அமைக்கவேண்டும் எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா கேட்டுள்ளார்.பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர், ஆழிப்பேரலையின் பின்னரான பொதுக்கட்டமைப்பு அமைக்கப்படாது போனால் சிறிலங்காவில் பாரிய அரசியல் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக குறிப்பிட்டார்.

ஆழிப்பேரலையின் பின்னரான புனரமைப்புகளை அரசசார்பற்ற அமைப்புகளைக் கொண்டு செயற்படுத்த வேண்டும். அதனைவிடுத்து இனவாதிகள் இன்று அரசசார்பற்ற நிறுவனங்களை விமர்சித்து வருவதை அவர் கண்டித்தார். (32)

## பொதுக்கட்டமைப்பு புலிகளுக்கு நேரடியாக நிதிவழங்க உருவாக்கப்பட்டதல்ல

### நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்ஹேசன்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பானது சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட அரசாங்க கட்டுப்பாடற்ற பிரதேசங்களின் அபிவிருத்திக்கு நிதி வழங்க இடமளிக்குமென நோர்வே பிரதிவெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் தெரிவித்துள்ளார்.

பொதுகட்டமைப்பு விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு நேரடியாக நிதிவழங்க உருவாக்கப்பட்டதொன்றல்லவென அவர் சுட்டிக்காட்டினார். உதவி வழங்கும் நாடுகளின் நிதி உரியமுறையில் பயன்படுத்தப்படுகின்றது என்பதை அந்த நாடுகள் பொதுக்கட்டமைப்பு மூலம் உறுதிப்படுத்திக் கொள்ள முடியுமென அவர் குறிப்பிட்டார். பி.பி.சி உலக சேவையின் ஏசியா ருடே நிகழ்ச்சிக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில் பொதுக்கட்டமைப்பு

(12ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே தூதரகம் மீது உரிய விசாரணை நடத்துக!

### - ஜே. வி. பி கோருகிறது

(கொழும்பு)

சிறிலங்காவிலுள்ள நோர்வே தூதரகத்தின் நடவடிக்கைகள் குறித்து உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஜே.வி.பி கோரியுள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட உரையாற்றிய ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நோர்வே தூதரகம் இராஜதந்திர நடவடிக்கைகளுக்கு அப்பால் நின்று செயற்படுவதாகக் குற்றம் சுமத்தினார்.

நோர்வே தூதரகத்தினால் அவசர சேவை வாகனமாக பதிவு செய்யப்பட்ட வாகனம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு வழங்கப்பட்டமையானது ஏற்றுக் கொள்ளக்கூடிய செயல் அல்ல.

இந்த நிலையில் அரசசார்பற்ற நிறுவனங்கள் செயற்படும் விதமானது சிறிலங்காவில் இறைமை பாதிக்கும் நோக்கை கொண்டதாகும்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## டி. சிவராம் படுகொலையை கண்டித்து பாராளுமன்றத்தில் த.தே.கூ. ஆர்ப்பாட்டம்

### - சர்வதேச விசாரணைக்கு வற்புறுத்து

(கொழும்பு)

ஊடகவியலாளர் சிவராம் படுகொலையைக் கண்டித்து தமிழ் தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று சிறிலங்கா பாராளுமன்றத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் இதன்போது சிவராமின் படுகொலை குறித்து சர்வதேச விசாரணைகள் நடத்தப்படவேண்டுமென அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.தமிழ் தேசியகூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்கு பாராளுமன்ற சுற்றுவட்டத்தில் இருந்து பாதயாத்திரையாக வந்தனர்.

இதன் பின்னர் அவர்கள் பாராளுமன்றத்தின் மத்தியில் ஊடகவியலாளர் சிவராமின் கொலையை கண்டித்து ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

இதன்போது சிவராமின் கொலை குறித்து சர்வதேச விசாரணைகள் நடத்தப்படவேண்டும்.உண்மை கொலைஞர்கள் மக்கள் முன்னிலையில் கொண்டுவரப்படவேண்டும் போன்ற கோசங்கள் அவர்களால் எழுப்பப்பட்டன.

இது இவ்வாறு இருக்க ஊடகவியலாளர் சிவராமின் கொலை

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா முப்படை தளபதிகள் மட்டக்களப்புக்கு நேற்று விஜயம்

(கொழும்பு)

கிழக்கு மாகாண பாதுகாப்பு நிலைமைகளை கண்காணிக்கும் நோக்கில் நேற்று சிறிலங்காவின் முப்படைகளின் தளபதிகளும் மட்டக்களப்புக்கு விஜயம் செய்தனர்.முப்படை தலைமை அதிகாரியும் கடற்படை தளபதியுமான தயா சந்தகிரி , வான்படை தளபதி எயார் மார்சல் டொனால்ட் பெரேரா, இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட ஆகியோர் இந்த பயணத்தில் இணைந்திருந்தனர்.இதன்போது அவர்கள் கிழக்கு மாகாண பாதுகாப்புப் படை அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடினர்.

## வீரச்சாவு

15.09.1991 அன்று மணலாற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட மின்னல் நடவடிக்கையின்போது விழுப்புண்ணடைந்து சிகிச்சை பெற்று வந்த போராளி ஒருவர் நேற்றுமுன்தினம் வீரச்சாவடைந்துள்ளார்.

மேஜர் குலம் (யோகராசா-பாஸ்கரன் , பழம்பாசி, நெடுங்கேணி, முல்லைத்தீவு, த.மு.-கணுக்கேணி மேற்கு, தண்ணீரூற்று, முள்ளிய

(12ஆம் பக்கம்பார்க்க)

## சுன்னாகத்தில் வாகனவிபத்து ஒருவர் தலை சிதறிப் பலி!

### -நேற்று மாலை நடந்த கோரம்

(நல்லூர்)

சுன்னாகம் பேருந்து நிலையத்துக்குஅருகில்நேற்று இடம்பெற்ற சிற்றூர்தி விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் ஸ்தலத்திலேயே தலைசிதறி மரணம் அடைந்துள்ளார். மாலை 7.00மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.மல்லாகம் கல்லறையைச் சேர்ந்த யோகநாதன் (வயது -45) என்பவரே மரணம் அடைந்துள்ளார்.

மேற்படி பேருந்துச் சாரதி பேருந்தை நிறுத்தாமல் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். சடலம் யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (41)

## வரி விளம்பரம்

### 2007 A/L உயிரியல் வகுப்புக்கள்

இடம்-கேம்பிறிச் கல்லூரி டிப்போ றோட், உதயநகர், கிளிநொச்சி, காலம்-சனி 2-3மணி,5-6மணி,ஞாயிறு-5-6 மணி, ஆசிரியர்- எம்.நேசன் B.SC (H.B), (சி.11779)

### காணி விற்பனைக்குண்டு

இ-1542, நரசிங்கன் கோயிலடி, இரத்தினபுரம், கிளிநொச்சி. உரிமையாளர்-வீ.இராசம்மா. மேலதிக விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். (சி.6098)

### விற்பனைக்குண்டு

இரணைப்பாலை வீதி, சிவநகர், 7 ஆம் வட்டாரத்தில் தென்னம் பிள்ளைத்தோட்டம் $^1/_3$ ஏக்கர் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு 7ஆம்வட்டாரம்,புதுக்குடியிருப்பு வே.சுப்பிரமணியம். வாங்கவிரும்புபவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். (5842)

### தவறிவிட்டது

இராசதுரை விஜயசாந் வயது 28 என்பவருடைய தேசிய அடையாள அட்டைஇல.780240814-V, ஓட்டுநர் உரிமம். Bankகாட்,சிம்காட் கொண்ட பேஸ் என்பன வட்டக்கச்சிப் பாடசாலைக்குஅருகில் தவறிவிட்டது. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கும்படி தாழ்மையுடன் வேண்டுகிறேன். (சி.11835)

### விற்பனைக்குண்டு

புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் வீதியில் 7ஆம் வட்டாரம் சிவநகரில் அமைந்துள்ள தென்னை பிரயோசனங்கள் உடைய குடியிருப்புக் காணியில் $^1/_4$ ஏக்கர்காணி விற்பனைக்குள்ளது. எடுக்க விரும்புவோர். காணியை நேரில் பார்த்து விலையைப் பேசிக்கொள்ளலாம். தொடர்புகொள்ளும் முகவரி. செ.அருளானந்தம், ராஜ்அழககம், முல்லை வீதி, புதுக்குடியிருப்பு. (5844)

### 2007 A/L கணித, விஞ்ஞான பிரிவு வகுப்புக்கள் நடைபெறும் நேரசூசி

பௌதிகவியல் வகுப்பு - வெள்ளி 3.00-4.00 மணி, சனி 8.00-9.00 மணி, 11.00-1.00 மணி (எம்.எஸ்.தவபாலன்), இரசயானவியல் - புதன் 11.00-1.00 மணி, 4.00-5.00 மணி, வியாழன் 11.00-1.00 மணி (எஸ்.சண்), இணைந்த கணிதம் - சனி 2.00-3.00 மணி, 5.00-6.00 மணி, ஞாயிறு 4.00-5.00 மணி (எஸ்.சிறிதரன்), உயிரியல்- சனி 2.00-3.00 மணி, 5.00-6.00 மணி, ஞாயிறு 5.00-6.00 மணி (எம்.நேசன்) இடம்:- கேம்பிறிச் கல்லூரி, கிளிநொச்சி. (நிர்வாகம்) (சி.11780)

### தவறிவிட்டது

தாவடியைச் சேர்ந்த வைத்திலிங்கம் சத்தியநாதன்ஆகிய எனது அடையாள அட்டை,பயண அனுமதி அட்டை, வெளிநாட்டு ஆவணங்கள் என்பன01.05.2005இல் பரந்தனுக்கும், புதுக்குடியிருப்புக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது.இதனைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். (6105)

# தமிழீழ சுகாதார சேவையினர் ஏற்பாட்டில் கலந்துரையாடல்

(உடையார்கட்டு)

புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள முல்லை மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் சித்த ஆயுர்வேத கூட்டுறவுச் சங்க புனரமைப்பிற்கான கலந்துரையாடலும்,முல்லை மாவட்டசுகாதார மேம்பாடு தொடர்பான கலந்துரையாடல் இன்று நடைபெறவுள்ளது.

மேற்படி இரு கலந்துரையாடலும் தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ச.விக்கிரமன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் சித்த ஆயுர்வேத கூட்டுறவுச் சங்க புனரமைப்பு கலந்துரையாடல் காலை 9.00 மணிக்கும், முல்லை மாவட்ட சுகாதார மேம்பாடு தொடர்பான கலந்துரையாடல் காலை 11.30 மணிக்கும் நடைபெறுமென முல்லை மாவட்ட தமிழீழ சுகாதார சேவையினர் தெரிவிக்கின்றனர். (19)

### வேகத்தைஅளக்கும் கருவி இல்லை

(நல்லூர்)

யாழ்.குடாநாட்டில் வேகக் கட்டுப்பாட்டை அளக்கும் கருவி இன்மையால்வேகக் கட்டுப்பாட்டை அளக்க முடியாத நிலை காணப்படுவதாக வடபிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். (41)

## பொது சுகாதாரப் பரிசோதகர்கள்-ஆட்சேர்ப்பு சுகாதாரத் திணைக்களம்,யாழ்ப்பாணம்

பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களை ஆட்சேர்ப்பதற்கான திட்டத்தின் கீழ் பின்வரும் தகைமைகளுடன்இலங்கை பிரஜைகள் ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவுத்திகதி.25.05.2005

01. கற்கை பயிற்சி காலம் 1 $^1/_2$ வருடங்கள்
02. தள பயிற்சி 6 மாதங்கள்
03. வயது எல்லை 18-30
04. கல்வித் தகைமைகள் :
    க.பொ.த (உயர்தரம்) விஞ்ஞானம் ஒரே தடவையில் மூன்று பாடங்கள் சித்தியடைந்திருப்பதுடன் உயிரியல்,விலங்கியல் பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருக்க வேண்டும்.
05. இலங்கையின் எப்பாகத்திலும் கடமை புரிய தயாராக இருக்க வேண்டும்.
06. நல்ல உடல் ஆரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும்.
07. 3 வருடவதிவிடச் சான்றிதழ் அதாவது வாக்காளர் இடாப்பு பிரதி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரியின் பெயர் வாக்காளர் இடாப்பில் பதிவுசெய்யப்படாத பட்சத்தில் பெற்றோரின் வாக்காளர் இடாப் புப் பிரதியும் விண்ணப்பதாரியின் பிறப்பு சான்றிதழ் பிரதியும் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.
08. பயிற்சிக்காலப்படி பயிற்சி காலத்தில் வழங்கப்படும்
09. பயிலுநர்கள் பயிற்சியை இடைக்காலத்தில் இடை நிறுத்தினால் பயிற்சி செலவுகள் முழுவதையும் பயிலுநர் செலுத்த வேண்டும்.
10. யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து 10 வருடங்கள் கடமை புரிய வேண்டும்.

மேற்படி ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பங்களை 07.05.2005 ஆம் திகதியில் இருந்து யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள சுகாதார பிரதி பணிப்பாளர் பணிமனையிலும், சகல சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்களைபூர்த்தி செய்து மேலுறையின் இடது பக்க மேல்மூலையில் "பொதுசுகாதார பரிசோதகர்களுக்கான ஆட்சேர்ப்பு" எனக் குறிப்பிட்டு பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 25.05.2005 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்கவும்.

வைத்தியகலாநிதி, ஆ.கேதீஸ்வரன்,
பிரதிமாகாணப் பணிப்பாளர்,
சுகாதாரசேவைகள்,யாழ்ப்பாணம்.

(சி.11840)

## மே 7 முதல்

பாடநூல் வெளியீட்டிலும், நாடளாவிய விற்பனை மேம்படுத்தலிலும் கொழும்பில் முன்னணி வகிக்கும் லங்கா புத்தகசாலை அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தின்

## மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்ற உள்நாட்டு வெளிநாட்டு [ஆங்கில, தமிழ்] பாடநூல்களும், அகராதிகள், கவிதைகள், சிறுகதைகள், சமய இலக்கியங்கள், மருத்துவ நூல்கள் மற்றும் பல

**இடம்:-** யாழ்.பல்கலைக்கழகவணிகத்துறை விரிவுரை மண்டபம்

**காலம்:-** 2005மே மாதம் 07ஆம் திகதி முதல்15 ஆம்திகதிவரை

**நேரம்:-** காலை 9.00 மணிமுதல் மாலை 6.00மணிவரை (புதியநேரம்)(வாரஇறுதி நாட்களும் விடுமுறை நாட்களும் உட்பட)

சிறப்பு விலைக்கழிவு

தொடர்புகளுக்கு,
தலைவர்,வணிக மாணவர் மன்றம்,
யாழ்-பல்கலைக்கழகம்,யாழ்ப்பாணம்.

(சி.11857)

### வீடு வாடகைக்குத் தேவை

3 அல்லது அதற்கு மேற்பட்ட அறைகளைக் கொண்ட வீடு வாடகைக்கு தேவை.இவ்வீடு வன்னிதொழில் நுட்பவியல் நிறுவகத்திலிருந்து 2KM தூரத்திற்குள் இருக்க வேண்டும். *தொடர்பு: வன்னிதொழில்நுட்பவியல்நிறுவகம், A9சாலை, கிளிநொச்சி.*

(6104) *TP NO 2285876*

### துர் நாற்றம் வீசுகின்றது

யாழ். பெரியகடை வீதியில் மின்சாரக் கசிவினால் கடந்த சில மாதங்களுக்கு முன்னால் எரிந்த கடை ஒன்றினுள் இப்பகுதியில் உள்ளவர்கள் குப்பைகளை கொட்டுவதால் இப் பகுதி எங்கும் துர்நாற்றம் வீசுவதாகத் தெரிவிக்கப் படுகின்றது (28)

### சுனாமிக்குப்பின் காலநிலை மாற்றம்

அம்பாறை மாவட்டத்தில் சுனாமி பேரலைக்குப் பின்பு கால நிலையில் பலவகையான மாற்றங்களும், புதுவிதமான நோய்களும் மக்கள் மத்தியில் காணப்படுவதாக சுகாதாரத் திணைக்கள அறிக்கையில் இருந்து தெரியவருகின்றது.

வெப்ப நிலைமை மிகவும் மோசமாக இருப்பதினால் நீர் நிலைகளில் நீர் வேகமாக வற்றிக் கொண்டு வருவதுடன், குடி நீரும் மாசடைந்து வருகின்றது. சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள கிணறுகளில் உவர்த் தன்மை ஏற்பட்டுள்ளமையினால் அரசசார்பற்ற அமைப்புக்கள் குடிநீரை இடைத் தங்கல் முகாம்கள் உட்பட பல பொது இடங்களிலும் வைக்கப் பட்டுள்ள தாங்கிகளில் நிரப்பி வருகின்றது. அரசசார்பற்ற அமைப்புக்கள் ஆரம்பத்தில் கூடாரம், அதற்குப் பின்பு தகரத்தினால் அமைக்கப்பட்ட தனித்தனி வீடுகள், இப்போது கிடுகுகளினால் வேயப்பட்ட வீடுகள் என்று அமைத்து வருகின்றன.

இப்படி மூன்று முறை அமைக்கப்பட்ட வீட்டுக்குச் செலவு செய்யப்பட்ட பணத்தில் பொருத்தமான ஒரு வீட்டைக் கட்டியிருக்கலாம் வீணான செலவு செய்யும் பணத்தில் பாதிக்கப்பட்டவர்கள் செய்த தொழிலை ஊக்குவிக்க வசதிகள் செய்திருந்தால் மக்கள்தேவையை பூர்த்தி செய்திருக்க முடியும்.

## 31ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு 18-01-1928



உதிர்வு 06-04-2005

**அமரர். மகேஸ்வரி நடராசா**

*எங்களுக்கெல்லாம் அம்மம்மா-சோலை*
*தாயின் அம்மா-காலனவன்*
*வந்து எங்கள்-பாசத்தாயை*
*பறித்ததேனோ!*

அன்னாரின் 31 ஆம் நாள் நினைவு நிகழ்வு அவரது இல்லத்திலும், செஞ்சோலையிலும் நடைபெறும். இந் நினைவு நிகழ்வில் எமது உறவு களை கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

"லலிதஸ்தான்"
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

"சோலைக் குடும்பத்தினா".
*செஞ்சோலை,*
*கிளிநொச்சி.*

(சி.11863)

## 01 ஆம் ஆண்டு நினைவலைகள்



தாயின்மடியில்:-03-12-1978

தாயகமண்ணில்:-06-05-2004

**கப்டன் நிதர்ஷன்/வதனன்**

**(நடேசன் தர்மகுணாந்தன்/குணா)**

எம் தேசத்தின் ஒளி விளக்காய் எம் தலைவனின்
வெற்றியின் சிகரமாய் பிரகாசிக்கும் நிதர்சாவே
எம் இனத்தின் துயர் தீர்க்க தூய்மை வழி நின்று
எதிரிக்கு துவம்சம் பல புரிந்து புனிதமான எம் தலைவன்
மனங்களுக்கும் மக்களின் மனங்களுக்கும் துயர்தீரும் வரை
என்றும் நிதர்ச(ன்) மாய் என்றும் வாழ்வாய்.

**செங்கலடி மட்டக்களப்பில் 06.05.2004 அன்று தேசவிரோதிகளின் சதிவலையின் போதுஇவருடன்வீரச்சாவடைந்த மேஜர். பகலவனையும் இன்நாளில் நினைவு கூருகின்றோம்.**

06.05.2005 அன்று எமது இல்லத்தில் நடைபெறும் 1ஆம் ஆண்டு நினைவிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகள், உற்றார், உறவினர்கள்,நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

***குரவயல்,***
***உடையார்கட்டு தெற்கு.*** *(6103)*

தகவல்
நடேசன் குடும்பத்தினர்.

# ஈராக் தொடர்பில் எனது நிலை சரியானதே

# பிரிட்டிஷ் பிரதமர் டொனி பிளேயர் கூறுகிறார்

(லண்டன்)

**ஈராக் விவகாரத்தில் எனது தலைமை யிலான பிரிட்டிஷ் அரசு எடுத்த முடிவுகள் சரியானது தான் என்று பிரிட்டிஷ் பிரதமர் டோனிப்பிளேயர் கூறியுள்ளார்.**



பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திற்குத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து தொழிற்கட்சி சார்பில் பிரதமர் டொனிபிளேயர் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டார். ஈராக் விவகாரத்தில் டொனிபிளேயர் அரசு அமெரிக்காவுக்கு ஆதரவாக செயற்படுவது பற்றிதான் இந்தத் தேர்தலில் எதிர்க்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சி கடுமையாக விமர்சித்து வருகிறது. இது குறித்து அவர் தெரிவிக்கையில்

ஈராக் விவகாரத்தில் எனது செயற்பாடு குறித்து கடுமையான விமர்சனங்கள் எழுந்திருப்பதை நான் அறிவேன். இந்தப்பிரச்சினையில் நான் நம்பிக்கைக்குரியவனா இல்லையா? என்பதை மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.

ஈராக்கில் ஆட்சி அதிகாரத்தில் இருந்து சதாம் நீக்கப்படவேண்டும் என்று நான் முடிவு எடுத்தேன். இந்த முடிவை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் எதிர் பார்க்கவில்லை. ஆனால் நல்ல எண்ணத்தோடுதான் இந்த முடிவை எடுத்தேன் என்பதைக் குறைந்த பட்சம் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன் என்றார் டொனிபிளேயர். இன்று பிரிட்டன் பொதுத் தேர்தல் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.



நேற்று முன்தினம் மோசூலில் நிகழ்ந்த கார்க்குண்டு தற்கொலைத் தாக்குதலின் போது படுகாயமடைந்த குழந்தையை மீட்டுச் செல்லும் அமெரிக்கப் இராணுவ வீரர்

## ஈராகின் புதிய பிரதமராக ஷியா பிரிவுத் தலைவர்

(பாக்தாத்)

ஈராக்கில் ஷியா பிரிவைச் சேர்ந்த தலைவர் இப்ராஹிம் அல்-ஜாஃபாரி பிரதமராக பதவியேற்றுள்ளார். அந் நாட்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற உறுப்பினர்களால் அவர் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## சோமாலியாவில் பொதுக் கூட்டத்தில் குண்டு வெடிப்பு அந் நாட்டுப் பிரதமர் மயிரிழையில் உயிர் தப்பினார்

(பெர்பாரா)



சோமாலியாவில் கூட்டம் ஒன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் அந்நாட்டு பிரதமர் அலி முகமது கெடி மகாதிஷ் மயிரிழையில் உயிர் தப்பினார்.

ஆபிரிக்க நாடுகளின் ஒன்றான சோமாலியாவில் வறுமையும், பஞ்சமும் ஒரு பக்கம் தாண்டவம் ஆடுகிறது. இன்னொரு பக்கம் தீவிரவாதிகளின் வன்முறையும், உள்நாட்டு கலவரமும் மக்களை இன்னல்களுக்கு ஆளாக்கி வருகின்றது.

இந்நிலையில் பிரதமர் அலிமுகமது கெடி மகாதிஷ் நகரில் உள்ள கால்பந்து மைதானத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த போது திடீரென்று குண்டு வெடித்தது.

இந்தக் குண்டு வெடிப்பில் பொதுக் கூட்டத்திற்கு வந்தவர்களில் 7 பேர் பலியானார்கள். 11 பேர் காயம் அடைந்தனர்.

பிரதமர் அலிமுகமது கெடி காயம் எதுவும் இன்றி உயிர் தப்பினார் பாதுகாப்பு அதிகாரிகள் அவரை பத்திரமாக வேறு இடத்திற்கு கொண்டு சென்று விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## ஹிட்லர் வீழ்ந்த 60ஆம் ஆண்டு நிறைவு மொஸ்கோ பிரமாண்டமான கொண்டாட்டம்

1945ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போர் மூண்டது. அப்போது உலகையே ஆட்டிப் படைத்த ஜேர்மனியின் ஹிட்லர் தலைமையிலான நாஜி படைகளுக்கும் ரஷ்ய படைகளுக்கும் நடந்த சண்டை ஹிட்லர் வீழ்ச்சிக்குள்ளானார்.

ஒவ்வொரு ஆண்டும் ஹிட்லர் வீழ்ந்த தினத்தை ரஷ்யா நினைவு நாளாகக் கடைப்பிடித்து வருகிறது. அப்போது இரண்டாம் உலகப் போரில் ரஷ்ய ஆதரவுப் படையில் பணியாற்றிய இராணுவ அதிகாரிகளையும் வீரர்களையும் மொஸ்கோ செஞ்சதுக்கத்துக்கு அழைத்துக் கௌரவித்து வருகிறது.

மொஸ்கோ செஞ்சதுக்கத்தில் இந்த வாரம் ஹிட்லர் வீழ்ந்த 60ஆம் ஆண்டு நாள் வீழ்ச்சி பிரமாண்டமாக நடந்துள்ளது. இந்நிகழ்வின் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த முன்னாள் இராணுவ வீரர்களும் கலந்து கொண்டனர்.

ஹிட்லர் ஐரோப்பா மீது படை எடுத்து இங்கிலாந்து உட்பட அனைத்து நாடுகள் மீதும் குண்டு வீசித்தாக்குதல் நடத்தினார். கடைசியாக ரஷ்யாவுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து தான் இவரது வீழ்ச்சி ஆரம்பமானது. இந்தப் போரில் ரஷ்யாவுக்கு ஆதரவாக பிரிட்டிஷ் படைகள் போரில் ஈடுபட்டன. அந்தச் சமயத்தில் சென்னையைச் சேர்ந்த வி.எஸ்.பி முதலியார் பிரிட்டிஷ் விமானப் படையில் அதிகாரியாகப் பணி புரிந்தார். போருக்குப் பின் அவர் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டு அம்பலாவில் போர் விமானங்களைப் பராமரிக்கும் தொழில் நுட்ப வல்லுனராக நியமிக்கப்பட்டிருந்தார். இவரையும் இம்முறை மொஸ்கோ விருதுக்காக அழைத்துள்ளது.



பாக்தாத்திற்கு 57 கி.மீற்றர் தொலைவிலுள்ள அலபறா என்ற இடத்தில் முக்கியமான தீவிரவாதியான அபு முஷாரப் அல் சார்கவியை தேடும் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்கப் படையினரிடம் மன்றாடும் ஈராக்கியர் ஒருவரையும் அவரது மனைவியும்.

## நோபல் பரிசுக்குப் போட்டியாக அறிவியல் ஆராய்ச்சிக்கு ஆறு கோடி பரிசு

(ஒஸ்லோ)

அறிவியல் கண்டு பிடிப்புக்களுக்கு வழங்கப்படும் நோபல் பரிசுக்குப் போட்டியாக ஆறு கோடி ரூபாய் மதிப்புள்ள பரிசுகளை வழங்கப் போவதாக நோர்வே விஞ்ஞானி அறிவித்துள்ளார்.

சுவீடன் நாட்டைச் சேர்ந்தவர் ஆல்பிரட் நோபல் டைனமைற் குண்டுகளைக் கண்டுபிடித்த இவர் நினைவாக ஆண்டுதோறும் நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

விஞ்ஞானிகளுக்கும், மருத்துவ நிபுணர்களுக்கும், பொருளாராத மேதைகளுக்கும், இலக்கியப் படைப்பாளிகளுக்கும், அமைதிக்குப் பாடுபட்ட தலைவர்களுக்கும் நோபல் பரிசு வழங்கப்படுகிறது. இது தான் உலகிலேயே உயரிய பரிசாகும். மொத்தம் ஒன்பது கோடி ரூபாய் பரிசுத்தொகையாக வழங்கப்படுகிறது.

இப்போது இதற்கும் போட்டி வந்துவிட்டது. நோர்வே நாட்டைச் சேர்ந்த இயற்பியல், (பௌதீகம்), அறிஞர் பிரட்காப்லி இந்தப் பரிசுத் திட்டத்தை அறிவித்திருக்கிறார். ஆஸ்ரோபிசிக்ஸ், நியூயோர், சயன்ஸ் நானோ டொக்னோலஜி ஆகிய மூன்று துறைகளில் ஆராய்ச் சிகள் செய்தவர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்படும்.

பரிசுத் தொகையாக ஆறு கோடி ரூபாய் வழங்கப்பட இருக்கிறது. 2008ஆம் ஆண்டு முதல் இந்தப்பரிசு வழங்கப்படும். இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்தப்பரிசு வழங்கப்படும். இந்தப்பரிசுகள் ஒஸ்லோ நகரில் செப்ரெம்பர் மாதம் வழங்கப்படும் . இந்தத் தகவலை நோர்வே நாட்டு கல்வி அமைச்சு கிறிஸ்ரின் கிளெமண்ட் வெளியிட்டார்.

நோர்வே நாட்டு அறிவியல் அக்கடமி பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்கும் அறிவியலைப் பரப்பவும் அதில் மாணவர்களுக்கு ஆர்வம் ஏற்படுத்தச் செய்யவும் இந்தப்பரிசு வழங்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது

## எரிமலைகள் வெடிக்கும் அபாயம்

## அமெரிக்க ஆராய்ச்சியாளர் எச்சரிக்கை

(வோஷிங்டன்)


அமெரிக்காவில் உள்ள 13 எரிமலைகள் வெடிக்கும் அபாயம் உள்ளதாக புவியியல் ஆராய்ச்சியாளர் கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் 169 எரிமலைகளைப் பற்றிய தகவல்கள் புவியியல் ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்டுள்ளனர். அலாஸ்கா, கலிபோர்னியா, வோஷிங்டன் , ஓரிகான் , ஹவாய், வையோமிங் ஆகிய பகுதிகளிலுள்ள 13எரிமலைகள் சீற்றம் கொண்ட எரிமலைகளாக எச்சரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக வோஷிங்டனில் உள்ள செயின்ட் ஹெலன்ஸ் எரிமலையும், ஹவாயில் உள்ள கிலாய் எரிமலைகளும் அதிக ஆபத்துக் கொண்ட எரிமலைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. எனவே இந்த எரிமலைகளைச் சுற்றியுள்ள மக்களும், எரிமலைகளுக்கு மேல் பறக்கும் விமானங்களுக்கும் எச்சரிக்கையாக இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## யுனிசெப் அமைப்பிற்கு புதிய தலைவர் நியமனம்

ஐ.நா சபையின் அங்கமான யுனிசெப் அமைப்பின் ஐந்தாவது தலைவராக அமெரிக்க முன்னாள் விவசாய அமைச்சர் ஆன் வெனிமேன் பதவியேற்றுள்ளார்.

அவர் கூறுகையில; உலக நாடுகளின் குழந்தைகள் நலத்தில் அக்கறை கொண்ட மிகப் பெரிய அமைப்பின் தலைவராக பொறுப் பேற்றதில் மிகுந்த மகிழ்ச்சி, வெளி நாட்டு அரசுகள், தொண்டு நிறுவனங்கள், சமூக அமைப்புக்கள் ஆய்வு நிறுவனங்களுடன் இணைந்து சமூக பொருளாதார முன்னேற்றத்திற்குப் பாடுபடுவேன். குழந்தைகளுக்கான சத்துணவு, பொது சுகாதாரம், வறுமை ஒழிப்புக்கு முன்னுரிமை கொடுத்து பணியாற்றுவேன் என்றார்.



பாக்தாத்திற்கு 270 மீற்றர் தொலைவிலுள்ள பாலைவனத்தில் விசேட நீதிபதிகளின் குழுவினரால் கண்டு பிடிக்கப்பட்ட பாரிய புதைகுழி, இங்கு அமெரிக்க இராணுவத்தால் கைது செய்யப்பட்டவர்கள் புதைக்கப்பட்டுள்ளதாகத் நம்பப்படுகின்றது.

## இந்தோனேஷியாவில் நிலநடுக்கம்

இந்தோனேஷியாவின் சுமாத்திரா தீவுப்பகுதியில் நேற்று இரண்டு முறை நிலநடுக்கம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. காலை 6.12 மணிக்கும் அதை அடுத்து 6.15 மணிக்கும் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. முதல் நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 5.1 புள்ளிகளாகவும், இரண்டாவது நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 5.3 புள்ளிகளாகவும் பதிவானது இதில் கட்டடங்களுக்கு சேதம் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# தொழில் தேர்ச்சிபெற்ற தொழிலாளர்குறைவே

# அபிவிருத்தி பணிகள் நிறைவடையாமைக்குக் காரணம்

## -கிளி.அரச அதிபர் தெரிவிப்பு

**கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்திப் பணிகள் நிறைவடையாமல் இருப்பதற்கு தொழில் தேர்ச்சிபெற்ற தொழிலாளர்கள் பற்றாக்குறையே காரணமென கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.**

கிளிநொச்சி அரச செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கல்விக்குழுக்கூட்டத்திற்கு தலைமை வகித்து கருத்துத்தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; கடந்த காலப்போரினால் அழிவடைந்த எமது மாவட்டத்தின் கட்டுமானங்களை அபிவிருத்தி செய்வதற்குக் கிடைக்கின்ற நிதியுதவிகளை பயன்படுத்தி அபிவிருத்திப் பணிகளை நிறைவாக முன்னெடுப்பதற்கு தொழிலாளர்கள் பிரச்சினை தடைகளாகவுள்ளன.

இதன் காரணமாக எமது மாவட்டத்தின் பல கட்டடப் பணிகள் ஒப்பந்த காலத்தில் முடிக்கப்படாமல் இழுபறி நிலையிலுள்ளன. கட்டடப் பணிகள் நிறைவாக முடிக்கப்படும் நேரத்தில் ஏனைய பணிகளை இலகுவாக முடிக்கலாம்.

கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்திக்கு 120மில்லியன் ரூபாய தேவைப்படுகிறது.

இதில் 100மில்லியன் ரூபாயினை நிகொட் தருவதாக தெரிவித்துள்ளது.

இதில் 30மில்லியன் ரூபாயினை பாடசாலைகளின் புனரமைப்புப் பணிகளுக்குப் பயன்படுத்த முடிவெடுத்த நிலையில் 30மில்லியன் ரூபாய் புனரமைப்புப் பணிகளுக்கு நிறைவாக இல்லாதுள்ளதென வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

போரினால் அழிவடைந்த பாடசாலைகளை உடனடியாக புனரமைக்கப்படவேண்டியுள்ளது.

அத்துடன் ஆசிரியர் பற்றாக்குறை ஓரளவு பட்டாதாரிகள் நியமனங்களுடன் தீர்க்கப்பட்டுள்ளது. இருப்பினும் ஆங்கில பாட ஆசிரியர்கள் பற்றாக்குறை தொடர்ந்து நிலவுகிறது. அப்பற்றாக்குறையினை தீர்க்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம் எனவும் தெரிவித்தார்.

# கண்டாவளைப் பிரதேசத்தில் 1700 பேருக்கு ஆள் அடையாள அட்டைகளை வழங்க ஏற்பாடு

(கண்டாவளை)

அண்மையில் கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்குவதற்காக ஆள், ஆட்பதிவுத் திணைக்களத்தினர் வருகைதந்து கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் 2200 இற்கும் மேற்பட்டவர்களுக்கு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்பட்டு பெறப்பட்டது.

இதில் முதற்கட்டமாக 1700 பேருக்கான ஆள் அடையாள அட்டைகள் பதிவு செய்துவந்துசேர்ந்துள்ளதாகவும் விரைவில் கிராம சேவையாளர்களின் உதவியுடன் கிராமங்களில் நேரடியாகச் சென்று அடையாள அட்டைகள் வழங்க இருப்பதாக கண்டாவளைப் பிரதேச செயலர் சீ.சத்தியசீலன் தெரிவித்துள்ளார். (46)

# சுகாதார விழிப்புணர்வு

பளை சுகாதார வைத்திய அதிகாரியின் முகாமைத்துவத்தில் அரச சார்பற்ற நிறுவனமான "அம்டா" (**AMDA**) வின் அனுசரணையுடன் கடந்த வெள்ளிக்கிழமை முகாவில் கிராமத்தின் மக்களுக்கு, சுகாதாரப் பகுதியினரால் சுகாதாரக் கல்வியூட்டலின் ஒரு அங்கமாகத் தொற்றுநோய்கள் பற்றியும் வருமுன் காக்கும் நடவடிக்கைகள் பற்றியும் வீடுவீடாகச் சென்று குடும்ப அங்கத்தவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. இதன் போது பூச்சிமருந்துகள் மற் றும் கிணறுகளுக்குக் குளோரின் இடல், தடுப்பூசிகள் மற்றும் நோய்களி னால் பாதிக்கப்பட்டோருக்கு வைத்திய சேவையும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

மேற்படி சேவையில் சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், தொண்டர்கள், பங்கு பற்றினார்கள் கிளிநொச்சி மாவட்ட பூச்சியியல் ஆய்வுக்குழுவினரால் மலேரியா, டெங்கு நுளம்புகள் பற்றிய ஆய்வும் மேற்கொள்ளப்பட்டது.

# மாற்றீடான வலுவுள்ளோர் சங்கத்தால் சித்திரம் வரைதல்- காட்சிப்படுத்தல் நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

சித்திரம் வரைதலும், அதனைக் காட்சிப்படுத்தும் நிகழ்வும் கிளிநொச்சி மாவட்ட மாற்றீடான வலுவுள்ளோர் புனர்வாழ்வு சங்கத்தினரால் அண்மையில் நடாத்தப்பெற்றுள்ளது.

மேற்படி நிகழ்வில் வித்தியாசமான குறைபாடுகளைக் கொண்ட 20 வயதிற்கு உட்பட்டவர்களைக் கொண்டு சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேசசெயலர் பிரிவில் இருந்தும் 40 பேர் கலந்துகொண்டனர். ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள தொடர்பகங்களில் வைத்தே நடத்தப்பட்டுள்ளது.

தமது எண்ணக்கருவில் தோன்றியவற்றை வரைபடம்மூலம் வெளிப்படுத்தி அதனைக்காட்சிப்படுத்தி வைத்துள்ளனர்.



(படம்-குகன்)

இதில் பங்கு பற்றிய மாணவர்கள் அனைவருக்கும் ஊக்குவிப்பாக அறுபது ஆயிரம் ரூபா பெறுமதிக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி நிகழ்வுகளை கிளிநொச்சி மாவட்ட மாற்றீடான வலுவுள்ளோா சங்கத்தினர் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (கு)

# நிரந்தரக்காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளது

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவிலுள்ள நான்கு கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கான நிரந்தரக்காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளதாக கரைச்சிப்பிரதேச செயலக காணி உத்தியோகத்தர் செ.ஸ்ரீரெங்கநாதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி விவேகானந்தநகர் கிராம மக்களுக்கு இன்று காலை 9.00 மணிமுதல் விவேகானந்தநகர் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் வைத்தும், உருத்திரபுரம் கிழக்கு, மேற்கு மக்களுக்கு நாளை சிவநகர் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்திலும், குஞ்சுப்பரந்தன் மக்களுக்கு 10ஆம் திகதியன்று குஞ்சுப்பரந்தன் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்திலும், 19ஆம் திகதியன்று உதயநகர் கிழக்கு கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் வைத்து உதயநகர் கிழக்கு மக்களுக்கான நிரந்தரக்காணி அனுமதிப்பத்திரங்களும் வழங்கப்படவுள்ளதென தெரிவித்துள்ளார். (சோ)

## பொதுக்கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி உருத்திரபுரம் மத்திய மருந்தகம் மகப்பேற்று மனை அபிவிருத்திச் சபையின் பொதுக்கூட்டமும் புதிய செயற்குழுத் தெரிவும் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது. வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ள மேற்படி கூட்டத்திற்கு வைத்தியசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும் வண்ணம் உருத்திரபுரம் வைத்தியசாலை வைத்திய அதிகாரி மு.கோபாலபிள்ளை வேண்டியுள்ளார். (சோ)

## பாம்பு தீண்டியது

(உடையார்கட்டு)

உடையார் கட்டில் குடும்பஸ்தர் ஒருவர் பாம்புக்கடிக்கு இலக்காகியுள்ளார்.

கடந்த 29 ஆம்திகதி இரவு ஏழு மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. வர்த்தக நிலையத்தினை மூடும் போது இவரைப் பாம்பு தீண்டியுள்ளது.

தங்கராசா (வயது-40) என்பவர் பாம்புக்கடிக்கு இலக்காகி உடனடியாக வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார். (19)

# சங்கங்களை வலுப்படுத்தல் பயிற்சி நெறி

நிகொட் சமூக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஆய்வு அபிவிருத்தி நடவடிக்கை நிறுவனத்தினால் ஒதியமலைக் கிராமத்தில் சங்கங்களை வலுப்படுத்தல் பயிற்சிநெறி கடந்த சனிக்கிழமை 10.00 மணிக்கு நடைபெற்றது.

திட்ட இணைப்பாளர் இ.சுரேந்திரன் தலைமையில் நடைபெற்ற பயிற்சி நெறியில் கிராமஅலுவலர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சமூக சேவை உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சி நெறியை நடத்தினர்.

# பிரதேச சபையினரால் மரக்கறிச் சந்தைக்கான புதிய கட்டடங்கள் வழங்கல்

ரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மரக்கறிச் சந்தைக்குரிய கடைகள் சமயம் பிரதேசசபையினரால் வழங்கப்பட்டு வருகின்றது. முன்னர் ழய கட்டடத்தில் வியாபாரம் செய்தோருக்கு இந்த புதிய கட்டடத்தெ..குதியில் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் ஒரு சிலர் சுயமாகவே பெற்றுக்கொண்டு வியாபாரத்தை ஆரம்பித்துள்ளனர். (18)

# வீதிச் சோதனை

(மல்லாவி)

துணுக்காய் காவல்த்துறைப் பணிமனையினரால் துணுக்காய் நகரப் பகுதியில் வீதிவிபத்துக்களைத் தடுக்க தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உந்துருளியில் இரண்டு பேருக்கு மேல் ஏற்றுவோா், மதுபோதையில் வாகனங்களைச் செலுத்துவோர், இலக்கத்தகடுகள் இன்றியும், இரவில் வெளிச்சமின்றி வாகனம் செலுத்துவோர் மீதும், பக்கக்கண்ணாடிகள், சமிக்ஞைகள் இன்றி வரும் வாகன சாரதிகள் மீதும் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதோடு வாகனத்தைச் செலுத்தும் சாரதிகளுக்கு வீதிகளில் வாகனம் செலுத்தும் முறையையும் அறிவுறுத்தி. (24)

# கிராம அலுவலர்களுக்கான வெற்றிடம் அதிகரிப்பு ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்கள் நியமனம்

(மன்னார்)

மன்னார் கிராம அலுவலர்களுக்கான வெற்றிடம் 44ஆக அதிகரித்துள்ளது.

இதனால் சில இடங்களில் கிராம அலுவலர்கள் பதில் கடமை புரிவதற்கு நியமிக்கப்பட்டிருந்தபோதிலும் பூரணமான முறையில் தமது பணியை அவர்களுக்கு வழங்க முடியாதுள்ளது. இதனால் ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தவர்கள் ஐந்து பேரை மன்னார் அரசாங்க அதிபர் விசுவலிங் அவர்கள் உள்நாட்டு அமைச்சின் அனுமதியுடன் பதில் நியமனம் செய்து வெற்றிடங்கள் அதிகம ள மாந்தை மேற்கு உதவி அரசாங்க பிரிவிற்கு அனுப்பியுள்ளார் அத்து, மேலும் மூவரை உள்நாட்டு அமைச்சின் அனு திக்காக அமைச்சுக்கு யுள்ளார். அனுமதி கிடைத்ததும் அவர்களும் த மேற்கு உதவி அரசாங்க பிரிவிற்கு நியமிக்கப்படுவார்கள் என படுகிறது. (18)

# பொதுக்கிணறு இடிந்தமையால் பாவனையாளர் கவலை

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் கற்சிலைமடுப் பகுதியில் அமைக்கப்பட்ட பொதுக் கிணறு குறுகிய காலத்திலேயே இடிந்துள்ளது.

மேற்படி பொதுக்கிணறானது சிலையடிக்கு அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பொதுக்கிணற்றில் முப்பது குடும்பங்கள் நீர் அள்ளி பாவனைக்குப் பயன்படுத்தி வருகின்ற நிலையில் கிணறு தற்போது இடிந்துள்ளமையால் இக்கிணற்றினை பாவனைக்குட்படுத்த முடியாது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (05)

# பயிர்கள் பாதிப்பு

மன்னாரில் நேற்று முன்தினம் பெய்த கடும் மழைகாரணமாக பயிர்கள் பல பாதிக்கப்பட்டுள்ளது.

இடி,மின்னல், காற்று என்பன காரணமாக வாழை, தென்னை போன்ற பயிர் கள் சேதமடைந்துள்ளது. இதே வேளை தென்னைமரங்கள் வீதியில் வீழ்ந்துள்ளமையால் போக்குவரத்துக்களில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். (18)

# பாதிக்கப்பட்டோருக்கு புலம் பெயர்ந்தோர் உதவுகின்றனர்; அரச உதவிகள் இழுத்தடிப்பு

## யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மு.சிவனேசன்

(கற்கோவளம்)

**சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புலம் பெயர்ந்து வாழும் மக்களுடைய உதவிகளே கிடைத்து வருகின்றன. அரசின் உதவிகளைப் பொறுத்தவரையில் இழுத்தடிப்பு நிலைமையே காணப்படுகின்றது.இவ்வாறு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மு.சிவனேசன் தெரிவித்துள்ளார்.**

கற்கோவளம் புனித நகர்ப் பகுதியில் 43குடும்பங்களுக்கு கிணறுகள் நிர்மாணிப்பதற்கான பொருட்கள் வழங்கும் நிகழ்வு வடமராட்சி சுனாமிஅனர்த்த செயலக இணைப்பாளர் க.பாலையா தலைமையில் இடம்பெற்றது.

அங்கு உரையாற்றும்போதே பாராளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார். வெளிநாட்டில் வாழும் ஒருவரும் அவருடன் சேர்ந்தவர்களும் இச் செயற்திட்டத்திற்கான உதவியினை வழங்கியுள்ளார்கள். சுனாமி ஏற்பட்டவுடனும், தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் உதவிகளை வழங்கியுள்ளது.

இந்த வகையில் புலம் பெயர்ந்த உறவுகளை இணைந்து எம்மக்களுடைய துன்பதுயரங்களைத் துடைப்பதில் தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் செயற்பட்டு வருகின்றமை பாராட்டத்தக்கதும் வரவேற்கத்தக்கதும் ஆகும் எனக் குறிப்பிட்டார் (41)

# தென்மராட்சி கல்வி வலய தமிழ்த் தினப் போட்டிகள்

(தென்மராட்சி)

தென்மராட்சி கல்வி வலயத்திற்குரிய தமிழ்த்தினப்போட்டிகள் நாளை மறுதினம் தொடக்கம் எதிர் வரும் 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. குறிப்பிட்ட தினங்களில் காலை 8.00 மணிக்குப் போட்டி இடம்பெறும் பாடசாலைகளுக்கு சமுகமளிக்கும்படி தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெ. இதயநாதன் அறிவித்துள்ளார்.

வலய மட்டத்தில் மட்டும் நடைபெறும் எழுத்தாக்கப் போட்டிகள் நாளை மறுதினம் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் இடம்பெறும்.

பிரதேச மட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் கொடிகாமம் பிரதேசப் பாடசாலைகளுக்கான தனிநிலையப் போட்டிகள் எதிர்வரும் 10ஆம் திகதி மீசாலை வீரசிங்கம் ம.வியில் நடைபெறும்.

குழுநிலைப் போட்டிகள் 11ஆம் திகதியும் நாட்டுக் கூத்துப் போட்டிகள் 12ஆம் திகதியும் கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வியில் இடம்பெறும்.

சாவகச்சேரி பிரதேசப் பாடசாலைகளுக்கான தனி நிலைப் போட்டிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இடம்பெறும். குழுநிலைப்போட்டிகள் எதிர்வரும் 16 ஆம் திகதி சாவகச்சேரி இந்துக கல்லூரியில் இடம்பெறும்.

நாட்டுக் கூத்துப் போட்டிகள் எதிர்வரும் 17ஆம் திகதி கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வியில் இடம்பெறும். (28)

# படையினரின் ஆக்கிரமிப்பிலிருந்த கோயிலாமனையில் மிகிவெடி அபாயம்

(தென்மராட்சி)

சிறிலங்காப் படையினரின் ஆக்கிரமிப்பிலிருந்து மக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்பட்ட கொடிகாமம் கோயிலா ைனக்கிராமத்தில் உள்ள விவசாயக் காணிகளில் மிதிவெடி அபாயம் அதிகம் காணப்படுவதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

முன்னர் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயமாக இருந்த இப்பகுதி மக்கள் பாவனைக்காக படையினரால் அண்மையில் அனுமதிக்கப்பட்ட போதும் அங்கு படையினரால் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகள் அகற்றப்படவில்லை.

இதனால் இப்பகுதியில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலைமை உள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (33)

# சிந்தனைத் திறன், வெளிப்படுத்தும் ஆற்றல்; சிவராம் புகழ்பெற்ற ஊடகவியலாளரானார்

## -யாழ். மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை

(யாழ்ப்பாணம்)

மாமனிதர் சிவராம் அவர்கள் இந்நாட்டின் குடிமகன் என்ற வகையில் சிந்தனைத்திறத்தாலும் வெளிப்படுத்தும் ஆற்றலும் ச்ர்வதேசப் புகழ் பெற்ற ஊடகவியலாளர் ஆனார் இதனை உலகம் ஒப்புக்கொண்டுள்ளது.

இவ்வாறு யாழ்மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை தெரிவித்துள்ளது. சனநாயக நாடு என்று பேசப்படும் இலங்கையில், கருத்துச் சுதந்திரம் படுகொலை செய்யப்படுவது மிகவும் அவமானத்துக்குரியதாகும். பூமியில் உயிர்கள்யாவும் குரல் எழுப்பி தமது மனநிலைகளை எண்ணக்கருத்துக்களை வெளியிட பிறப்பிலேயே உரிமையுண்டு ஒரு குரல்வளம் பலருக்குப்பிடிக்கும், சிலருக்கு பிடிக்காது குயில் கூவுவது இனிமை.காகம்கரைவது கசப்பு என்பதெல்லாம் அவரவர் புரிந்துகொள்ளலால் ஏற்படுவது.

அதேபோலத்தான் ஆறறிவு படைத்த மனிதன் சிந்தனைக் கருத்துக்களைப் பேச்சாக,எழுத்தாக வெளிக்கொண்டு வருகின்றான். உலகில் உள்ளவரலாற்று நூல்கள் யாவும் சுதந்திரமாகச் சிந்தித்து, ஆராய்ந்து வெளியிடப்பட்டவர்களின் கருத்துச் சுதந்திரத்தின் வெளிப்பாடுகளே.

சனநாயகநாட்டில் சனநாயக மரபுக்கொவ்வாத விடயங்கள் காணப்படின் ஆராய்ந்து தெளிவு படுத்தப்பட வேண்டியது நல்லதொரு ஊடகவியலாளரின் நற்பணியாகும். அதைத்தான் செய்தார் மாமனிதர் சிவராம். அவரது கருத்துக்களை உள்வாங்க மறுத்த கல்மனங்கள் கோழைத்தனமாக அவரைப் பலி கொண்டன. அவரது எழுதுகோலுக்கு எதிராகக் கொலையாளியின் துப்பாக்கி நீண்டது. மாமனித-ஊடகவியல்-உலக மலை சரிந்தது. ஆனால் அவரின் கருத்துக்கள் ச்ர்வதேசரீதியாக வரலாற்றுக் காவியமாகப் போகிறது.

நிமலராஜன்,நடேசன் என்ற ஊடகவியலாளர் வரிசையில் மாமனிதர் சிவராமும் படுகொலையானார் .கல்விச்சமூகம் இனியும் கண்மூடிப்பார்த்துக்கொண்டிருக்க முடியாது. இந்நாட்டின் வளங்கல் அதுவும் புத்திஜீவிகள் அழிவதை இனிமேலும் அனுமதிக்க முடியாது.

அமரர் சிவராமை இழந்து தவிக்கும் குடும்பத்தவர்களுடனும் உறவுகளோடும் யாழ். மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவையும் துயர் பகிர்கின்றது. இப்படுகொலையை வன்மையாகக் கண்டிப்பதுடன் இத்தகைய படுகொலைகள் மேலும் தொடராவண்ணம் அரசு மிக விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் எனவும் பேரவை மேலும் தெரிவித்துள்ளது.

# பொதுச்சுகாதார பரிசோதகர் சங்க வருடாந்தபொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பொதுச்சுகாதார பரிசோதகர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் பகல் 2.00 மணிக்கு திருநெல்வேலி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்டத்தில் சுகாதாரப்பரிசோதகர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து விரிவா கலந்துரையாடப்படவுள்ளது. அத்துடன் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறும்

# இந்துக் குருமார் அமைப்பின் வருடாந்த பொதுக்கூட்டம்

"நியந்த்ரி" என்ற இந்துக் குருமார்களுக்கான அமைப்பினரது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் எட்டாம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு நல்லூர் சிவன்கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் கோபாலகிருஷ்ணஐயர் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் அண்மையில் கலாபூஷணம் விருதுபெற்ற சிதம்பரநாதக்குருக்கள் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளார்.

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரத்தில் சித்திபெற்ற அந்தணச் சிறார்களுக்கு புலமைப்பரிசில்களும் வறிய அந்தணக்குடும்பங்களுக்கு உதவிப்பொருட்களும் இந்நிகழ்வில் வைத்து வழங்கப்படவுள்ளன. (33)

# சிவராம் படுகொலை சூத்திரதாரியை கண்டுபிடிப்பது அரசுக்கு முடியாத காரியம்

## - தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மாமனிதர் டி.சிவராம் அவர்களின் படுகொலைச் சூத்திரதாரியைக் கண்டு பிடிப்பது என்பது சிறிலங்கா அரசிற்கு முடியாத காரியம் ஏனெனில் இக் கொலையின் சூத்திரதாரியே சிறிலங்கா அரசாங்கம் தான் எனத் தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் தெரிவித்துள்ளது.

பிரபல பத்திரிகையாளரும், இராணுவ அரசியல் ஆய்வாளருமான டி.சிவராம் எனும் ஒரு மாமனிதரை இன்று தமிழினம் இழந்து நிற்கின்றது. இதற்கு சிறிலங்கா அரசே முழுப் பொறுப்பினையும் ஏற்க வேண்டும்.

சிங்கள இராணுவப் புலனாய்வாளர்களும் அவர்களுடன் இணைந்து செயற்படும் தேச விரோதக் குழுவுமே இந்த அராஜகத்தினை ஒப்பேற்றியுள்ளது. டி.சிவராம் சிங்கள அரசின் சமாதானத்தின் மீதான போலியான போக்கினையும், தமிழ் இனத்தின் மீதான அராஜகங்களையும் துணிந்து சர்வதேசத்திற்கு ஊடகங்கள் மூலம் வெளிக்கொணர்ந்தவர்.

இவ்வாறே தமிழர்களுடைய பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்த நிமலராஜன், நாட்டுப்பற்றாளர் நடேசன் தொடக்கம் இன்று டி.சிவராம் எனும் மாமனிதனையும் சிறிலங்கா பேரினவாதிகள் கோழைத்தனமான முறையில் படுகொலை செய்துள்ளனர். இவ்வாறு அரசால் இவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளமையானது ஊடகத்திற்கும் அதன் சுதந்திரத்திற்கும் விடப்பட்ட பெரும் சவாலாகவே நாம் கருதுகின்றோம்.

சிங்கள அரசின் இந்தக் கோழைத்தனமான செயல்களானது உண்மைச் செய்திகளை உலகிற்கு வெளிப்படுத்தும் பிரபல தமிழ் ஊடகவியலாளர்களை படுகொலை செய்வதனூடாக சர்வதேசத்துக்கு உண்மையான செய்திகளை சென்றடையாமல் தடுப்பதை நோக்காகக் கொண்டுள்ளது.

டி.சிவராம் காலத்திற்குக் காலம் உண்மையான செய்திகளையும் ஜதார்த்தமான இராணுவ அரசியல் ரீதியான ஆய்வுகளையும் பத்திரிகை வாயிலாக வெளிக்கொணர்ந்தவர். இவரின் வீடு அடிக்கடி பல தடவைகள் சிறிலங்காப் புலனாய்வாள்களினால் சோதனைக் குள்ளாக்கப்பட்டதும் இவரும் அடிக்கடி விசாரணைக்குட்படுத்தப்பட்டதும் யாவரும் அறிந்ததே.

சிங்கள அரசின் சட்டங்கள் கொள்கைகள் உருவாக்கி நடைமுறைப் படுத்தப்படும் அதியுயர் பாதுகாப்பு வலயமான பாராளுமன்ற தொகுதியிலுள்ளேயே கொலை செய்யப்பட்டமையை சிங்கள அரசினால் மூடி மறைக்க முடியாது. இதனைச் செய்தது சிங்கள புலனாய்வாளரும் அதனோடு இணைந்து செயற்படும் தேசவிரோதக் குழுக்களுமே ஆகும். அதனால் சிறிலங்கா அரசே சிவராமின் கொலைக்குப் பதில் சொல்ல வேண்டும்.

இக்கொலைகள் மூலம் சிறிலங்காவில் அரசினால் ஊடகச் சுதந்திரம் மறுக்கப்பட்டதை சர்வதேசமும் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு அரசு மேற்கொண்டுவரும் ஊடகவியலாளர் மீதான தாக்குதல்களை உடன் நிறுத்த வேண்டும் எனத் தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் தெரிவித்துள்ளது. (33)

# உடற்கல்வி உ.க பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(தென்மராட்சி)

தென்மராட்சிக் கல்வி வயலத்தில் உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெ. இதயநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த உடற்கல்விப் பாடத்தில் ஆகக்குறைந்தது ஆசிரியர் பயிற்சியைப் பெற்ற இ.ஆ.சே.1 2-1, ஆசிரியர்கள் இதற்கு விண்ணப் பிக்க முடியும்.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை வலயக்கல்வி அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (28)

# கலந்துரையாடல்

(தென்மராட்சி)

யாழ்.தென்மராட்சி தவசிகுளம் கிராமத்தை அபிவிருத்தி செய்வது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 14ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு தவசிகுளம் போக்கட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலையில் இடம்பெறும்.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் கலந்து கொள்ளவுள்ளார். (33)

# இனப்பிரச்சினை தொடர்பான கேள்விக்கு

# பதிலளிக்க அவகாசம் கேட்ட அமைச்சர்

**இனப்பிரச்சினை தொடர்பாக நேற்று சிறிலங்கா பாராளுமன்றத்தில் எழுப் பப்பட்ட கேள்வியொன்றிற்கு அரசியல் விவகார தேசிய ஒருங்கிணைப்புக் குழு அமைச்சர் டி.ஈ.டபிள்யு.குணசேகர பதிலளிக்க மறுத்துள்ளார். தனக்கு அவகாசம் வேண்டும் என அவர் கேட்டுள்ளார்.**

சமாதான நடவடிக்கைகள் மற்றும் இன விவகாரம் தனது அதிகாரத்தின் கீழ் வருவதல்ல அது ஜனாதிபதியின் கீழ் வரும் விடயம் என்று குறிப்பிட்ட அமைச்சர், ஜனாதிபதியின் சார்பில் இக்கேள்விக்கு பிரதமரே பதிலளிக்க வேண்டும் என்றும் அதனால் அந்த கேள்வியை பிரதமரிடம் கேட்குமாறும் கூறினார். எனினும் இக்கேள்வி தன்னிடம் கேட்கப்பட்டதனால் அரசாங்கத்தின் சார்பில் அதற்கு விரிவான விளக்கம் அளிக்க தனக்கு சில வார கால அவகாசம் வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். இனப்பிரச்சினை தொடர்பாகவும் அதற்கு இந்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கே அமைச்சர் இவ்வாறு முன்தினம் பதிலளித்தார். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் குறிப்பாக மக்கள் விடுதலை முன்னணி போன்ற கட்சிகளின் நிலைப்பாட்டிற்கு மத்தியில் அரசாங்கம் இனப்பிரச்சினை தீர்விற்கு என்ன நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது என்றும், சமாதான நடவடிக்கைகள் சம்பந்தமாக எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகளை தெளிவுபடுத்துமாறும் பாராளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் கேட்டார்.

அமைச்சர் கால அவகாசம் கேட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்த தி.மகேஸ்வரன் இரண்டு தசாப்த பிரச்சினை தொடர்பான கேள்விகளுக்கு பதிலளிக்கக் கூடிய நிலையில் அரசாங்கம் இருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். எனினும் இக்கேள்விக்கு பதிலளிக்கும் நிலையில் தான் இல்லை எனக் குறிப்பிட்ட அமைச்சர், இவ்விடயம் குறித்து சனாதிபதிக்கு அறிவித்ததாகவும் அவரின் பதில் இன்னும் சில வாரங்களில் கிடைத்துவிடும் என அவர் எதிர்பார்ப்பதாகவும் கூறினார். இவ்விடயம் குறித்து பிரதமர் மகிந்த ராஜபக்ச எதுவும் கூறாது மௌனம் சாதித்துக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பயணிகளின் கையடக்கத் தொலைபேசியை அபகரிக்கும் கும்பல்

கொழும்பு கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவில் வீதியில் செல்பவர்கள் கைகளில் எடுத்துச் செல்லப்படும் கையடக்கத் தொலைபேசிகளை உந்துருளிகளில் வரும் கும்பல் ஒன்றால் அபகரித்துச் செல்லப்பட்டு வருகிறது.

குறிப்பிட்ட இந்த மர்மக் கும்பல்களிடம் அண்மைக்காலமாக பலர் தமது கையடக்கத் தொலைபேசிகளைப் பறி கொடுத்துள்ளடன், இது தொடர்பாகப் பொலிசாரிடம் முறையிட்டுள்ளனர்.

கையடக்கத் தொலைபேசியை அபகரித்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இந்தக் கும்பலுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதை அடுத்து இரண்டு தினங்களுக்கு முன்னரும் கொட்டாஞ்சேனை சென்பெனடிக் மாவத்தையில் வைத்து இரண்டு இளைஞர்கள் தமது கையடக்கத் தொலைபேசிகளை உந்துருளி கும்பலிடம் பறிகொடுத்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட இந்த இளைஞர்கள் தமது கையடக்கத் தொலைபேசிகளில் உள்வந்த அழைப்புகளுடன் தொடர்பு கொண்டிருந்தபோதே அவற்றைப் பறிகொடுத்துள்ளனர்.

## முஸ்லிம் அடிப்படை வாதிகளுடன் கருணா குழுவிற்குத் தொடர்பு

கிழக்கில் கருணா குழுவினருடன் முஸ்லிம் அடிப்படைவாத சக்திகள் இணைந்து செயற்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.அண்மையில் கைது செய்யப்பட்டுள்ள கருணா குழுவின் முக்கியஸ்த்தர் இனியபாரதியுடன் சில முஸ்லிம்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.இது தமிழ் மக்களுக்கும், முஸ்லிம்மக்களுக்கும் இடையிலான உறவில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது என்பதுடன் எதிர்காலத்தில் விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் என்றும் கவலை வெளியிடப்பட்டுள்ளது.

## பாதையை விட்டு விலகிய வான் வீட்டுக் கூரைமீது பாய்ந்தது

*-நுவரெலியாவில் சம்பவம்*

(கொழும்பு)

நுவரெலியாவிலிருந்து பதுளை நோக்கி வந்து கொண்டிருந்த வான் ஒன்று ஹலிஓயா பகுதியில் பாதையை விட்டு விலகி வீட்டுக் கூரை ஒன்றின் மீது பாய்ந்து விபத்துக்குள்ளாகிய சம்பவம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது. இவ்விபத்துச் சம்பவத்தின் போது வானில் பிரயாணம் செய்த பன்னிரண்டு பேர் காயங்களுக்குள்ளாகி பதுளை அரசினர் மருத்துமனையில் அனுமதிக்கபட்டுள்ளனர். இவர்களில் அறுவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. நுவரெலியாவில் நடைபெற்ற வசந்த கால விழாவிற்குச் சென்று திரும்பிக்கொண்டிருந்த போதே இவ்விபத்து ஏற்பட்டிருக்கின்றது. வாகனம் பாதைக்குக் கீழுள்ள வீட்டுக்கூரைமீது பாய்ந்துள்ளது. ஆனால் சம்பந்தப்பட்ட வீட்டில் இருந்த எவரும் எத்தகைய காயங்களும் இன்றி தெய்வாதீனமாகத் தப்பியுள்ளனர்.

இவ்விபத்துத் தொடர்பான விசாரணைகளைப் பதுளை வாகன குற்றத்தடுப்புப்பிரிவுப் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு உருவாக்கம்; அரசிற்கு ஆதரவை வழங்கமாட்டோம்

**ஜாதிக ஹெல உறுமய அறிவிப்பு**

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பை உருவாக்கினால் அரசாங்கத்துக்கு தாம் எந்த வித ஒத்துழைப்பையும் வழங்கப் போவதில்லை என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்தன நேற்றுப் பாராளுமன்றத்தில் ஆற்றிய விசேச உரையின் போதே இந்தக் கருத்தை அவர் வெளியிட்டார்.

சமாதான பேச்சுக்கள் இடம்பெற்ற அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது பலத்தை அதிகரித்துக் கொண்டமை இதற்கு உதாரணமாகும் என்றும் அத்துரலியே ரத்தன தெரிவித்தார்.

இதன் பின்னர் உரையாற்றிய சிறிலங்கா முஸ்லிம்காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் ஹசன் அலி, யுத்தம் இடம்பெற்ற காலத்தைக் காட்டிலும் ஆழிப்பேரலையின் பின்னர் மக்கள் பாரிய இன்னல்களுக்கு உள்ளாகியுள்ளனர் எனக்குறிபிட்டார்.

இந்த நிலையில் நிவாரணங்கள் உரிய முறையில் பகிரப்படாமல் போனால் நிலைமை மோசடையும் என்றும் அவர் எச்சரித்தார். (32)

*--பாடசாலை வகைப்படுத்தல் திட்டம்*

## வடக்கு கிழக்கில் 758 பா சாலைகள் மிகக்கஷ்ட பாடசாலைகள்

(கொழும்பு)

கல்வி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலை வகைப்படுத்தல் திட்டத்தின் கீழ் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள 1997 பாடசாலைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம் தெரிவித்தார்.

இம்மாகாணத்தில் 758 பாடசாலைகள் மிகக்கஷ்ட பாடசாலைகளாகவும் 281 பாடசாலைகள் கஷ்டபாடசாலைகளாகவும் 260 பாடசாலைகள் வசதி குறைந்த பாடசாலைகளாகவும், 379 பாடசாலைகள் வசதியான பாடசாலைகளாகவும் 319 பாடசாலைகள் மிகவசதியான பாடசாலைகளாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இவற்றுள் மிகக்கஷ்ட பாடசாலைகளுக்கு இவ்வாண்டு சனவரி முதல் அங்கு கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்களுக்கு தலா 2500,1500 ரூபா விசேட கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளது.

**-சந்தேக நபரை 24 மணித்தியாலயத்திற்கு மேல்**

## பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கும் சட்டதிருத்தத்திற்கு ரவிராஜ் பா.உ கண்டனம்

(கொழும்பு)

சந்தேக நபரொருவரை 24 மணித்தியாலங்களுக்கு மேல் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படுவது மனித உரிமை மீறல் என்று தமிழ்த் தேசியக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் நேற்று முன்தினம் சிறிலங்கா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.இத்தகைய மனித உரிமைகளை மீறும் எந்தவொரு நடவடிக்கைக்கும் தமது கட்சி ஒருபோதும் ஒத்துழைக்காது என்றும் அவர் கூறியுள்ளார். சனநாயகத்தை மதிக்கும் எந்தவொரு நாடும் இத்தகைய சட்டமொன்றைக் கொண்டு வராது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற குற்றவியல் வழக்கு விசாரணை திருத்த சட்டமூலம் மற்றும் குற்றவியல் வழக்கு விசேட ஒழுங்குமுறை திருத்தச்சட்ட மூலம் ஆகியன மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போது பாராளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் இவ்விடயங்களைத் தெரிவித்துள்ளார்.

## பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பதென்ற ஜே.வி.பி யின் முடிவில் மாற்றமில்லை

*-தலைவர் சோமவன்ச அமரசிங்க கூறுகிறார்*

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பதென்ற தமது முடிவில் மாற்றமில்லை தொடர்ந்து எதிர்ப்போமென ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

சுனாமி பொதுக்கட்டமைப்பு தொடர்பாக அண்மையில் பிலியந்தலையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ஜே.வி.பியினர் எதிர்த்தாலும் அதனை பொருட்படுத்தப்போவதில்லை என்று சனாதிபதி சந்திரிகா தெரிவித்தார் இது தொடர்பாக ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்கவிடம் ஐலண்ட் செய்தியாளர் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமரசிங்க மேலும் தெரிவிக்கும் போது பொதுக்கட்டமைப்பு மூலம் விடுதலைப்புலிகள் அரசாங்கத்தில் பங்கு வகிக்காத போதும் சிறிலங்காவின் காணி சீர்திருத்தச்சட்டம் அரசியலமைப்பு, மற்றும் இறைமை ஆகியவற்றுக்கு பொதுக்கட்டமைப்பு முரணானது அது அவர்களுக்கு பூரண அதிகாரத்தை வழங்குகிறது. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் தமிழ் முஸ்லிம் மக்கள் அதனை விரும்பமாட்டார்கள் அத்துடன் அவர்களின் கணக்கு வழக்குகளை யார் கண்காணிப்பது என்றும் வினாவெழுப்பியுள்ளார்.

## தற்காலிக தியவதன நிலமே அரசால் நியமனம் குழப்ப நிலையைத் தடுக்க பொலிசார் குவிப்பு

**-பொலிசாரை விலக்க அஸ்கிரிய பீடாதிபதி கோரிக்கை**

(கொழும்பு)

கண்டித் தலதாமாளிகைக்கு பதில் தியவதன நிலமே ஒருவரை அரசு நியமித்ததையடுத்து ஏற்பட்ட குழப்பநிலையால் தலதாமாளிகைப் பகுதியில் குவிக்கப்பட்டிருந்த 200 இற்கும் மேற்பட்ட பொலிசாரை அங்கிருந்து அகலுமாறு அஸ்கிரிய பீடாதிபதி உத்தரவிட்டு [illegible]ளார்.

மேற்படி நியமனம் தொடர்பாக கண்டி தலதா மாளிகையிலுள்ள தியவதன நிலமேயின் காரியாலயத்துக்கும் பௌத்தமத விவகார பிரதி ஆணையாளரின் அலுவலகத்துக்கும் பலத்த பொலிஸ் பாதுகாப்பை அரசாங்கம் வழங்கியிருந்தது. ஆயினும் பொலிசாரை அங்கு குவித்திருப்பதால் பக்தர்களுக்கு அது பெரிதும் அசௌகரியத்தை ஏற்படுத்துவதாக தெரிவித்து மேற்படி பொலிசாரை அகன்று செல்லுமாறு அஸ்கிரிய பீடாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

தலதா மாளிகையின் தியவதன நிலமேயாக பணியாற்றிய நிரஞ்சன் விஜயரத்தினவின் பதவிக்காலம் நேற்று முன்தினத்துடன் முடிவு பொறுவதால் அவரின் இடத்துக்கு புதிய ஒருவரை தேர்தல் மூலம் தெரிவு செய்வதற்கு முன்பு தற்காலிகமாக தியவதன நிலமே ஒருவரை அரசு நியமித்தது.

இதனை அஸ்கிரிய மல்வத்த பீடாதிபதிகள் எதிர்த்ததுடன் புதிய தியவதன நிலமேயை தெரிவு செய்யும் வரை நிரஞ்சன் விஜயரத்னவை தொடர்ந்து வைத்திருக்க கோரினர். எனினும் பௌத்தமத ஆணையகம் இதனை நிராகரித்து புதிய ஒருவரை நியமிக்க வேண்டும் என தெரிவித்தது இதற்கு வெளியார் ஒருவரை நியமிக்க அனுமதிக்க முடியாது என அஸ்கிரிய பீடாதிபதி தெரிவித்தார். இதன் காரணமாகவே அங்கு பொலிசார் வரவழைக்கப்பட்டிருக்கின்றனர்.

இன்றைய நிலையில் மக்களுக்கான மருத்துவத்தேவைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. ஆனால் அவர்கள் தேவைக்கேற்ப மருத்துவச் சேவைகள் அரசாங்கத்தினால் விரிவு படுத்தப்படுகின்றனவா? என்றால் அது நடைபெறாத காரியமாகவே உள்ளது.


இந்தவகையில் உடையார்கட்டுப் பிரதேசமும் அதனைச் சூழவுள்ள கிராம மக்களும் தங்கள் மருத்துவ தேவையைப் பூர்த்தி செய்வதில் தற்போதைய சமாதான காலத்திலும் கூட பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக கேட்டறிய முற்பட்ட போது இங்கு நிரந்தர மருத்துவமனை ஒன்று நிச்சயம் ஆரம்பிக்கப்பட வேண்டிய தேவை இருக்கின்றது என்பதை வலுவாக உணர முடிந்தது.

நாம் சந்தித்தவர்கள் கூறிய விடயங்களை சகலரின் பார்வைக்கும் சமர்ப்பிக்கின்றோம்.

* * *

இருந்து இங்கு வந்து பணியாற்றுகின்றார். ஏனைய எந்த ஆளணி வசதியும் இல்லை தொண்டர்களாக ஐந்து பெண்கள் பணியாற்றுகின்றனர். இவர்களுக்கு



சேவை வழங்கும் டாக்டர் மகேந்திரம்

கடந்த எட்டு வருடங்களாக எதுவித கொடுப்பனவும் வழங்கப்படுவதில்லை. முற்றுமுழுதாக சேவை நோக்கத்துடனேயே இவர்கள்

வழங்குகின்றோம். ஏனெனில் இங்கு சிகிச்சைகளை பெறமுடியாதவர்கள் மேலதிக சிகிச்சையைப் பெறுவதற்காக செல்லக்கூடிய வசதி இல்லாதவர்கள்.

இப்பகுதியில் உள்ள மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள மக்களே இம்மருத்துவ மனையை நம்பி வாழ்கின்றனர். இங்கு சிகிச்சை கிடைக்காத பட்சத்தில் மேலதிக சிகிச்சைக்கு செல்லக் கூடிய வசதிகள் எதுவும் இவர்களிடம் இல்லை.

இதனால் இவர்கள் வீட்டுக்குச் சென்று தங்கி விடுகின்றார்களே தவிர சிகிச்சை பெறச்செல்ல முடிவதில்லை. பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கி உள்ள மக்களே இவ்வைத்தியசாலையை நாடி

இங்கு பணியாற்றுகின்றனர்.

உடையார் கட்டில் நிச்சயம் நிரந்தரமான வைத்தியசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும். இவ்வைத்தியசாலையின் ஆண்டு விழா நிகழ்வுகளின் போது இது தொடர்பான சம்பந்தப்பட்டவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இவ்வைத்தியசாலை நிரந்தர வைத்தியசாலையாக்கப்படும் எனப் பல தடவைகள் சம்பந்தப்பட்டவர்களால் உறுதி மொழி அளிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இது வரை மக்கள் நெருக்கடியின்றி சிகிச்சை பெறுவதற்குக் கூட தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இல்லை.

**யோகராஜ் சோபனா சுகாதாரத் தொண்டர் (மூன்று பிள்ளைகளின் தாய்)**

தொண்டர்களை நிரந்தரமாக்குவதற்கான நேர்முகப்பரீட்சைக்கு தோற்றி

# உடையார்க்கட்டில் நிரந்தர வைத்தியசாலை அமைத்துக்கொடுக்கப்படுமா?

இருந்தோம். ஆயினும் இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. கடந்த எட்டு வருடங்களாக எதுவித வேதனம் இன்றி கடமையாற்றி வருகின்றோம்.

எமது குடும்ப நிலையையும் பொருட்படுத்தாது சேவை நோக்குடன் பணியாற்றி வருகின்றோம்.

கர்ப்பிணியாக இருந்த போதும் தொடர்ந்து பத்துமாதமாக துவிச்சக்கர வண்டியில் வந்து நாம் எமது சேவையினை வழங்கினோம். கடந்த மழை காலத்தின் போது வீதியை மேவி இடுப்புக்கு மேல் நீர்பாய்ந்து கொண்டிருந்தது. அப்போது கர்ப்பிணியாக இருந்த போதும் துவிச்சக்கரவண்டியையும் தூக்கிக்கொண்டு அந்த வெள்ளத்தினைக் கடந்து வந்து மக்களுக்குச் சேவையை வழங்கினோம்.



வைத்தியசேவைக்காகக் காத்திருக்கும் மக்கள்

பணியாற்றுகின்றனர். இவர்களுக்கான சீருடைகள் கூட வழங்கப்படுவதில்லை.

இந்தத் தொண்டர்கள் தமக்கு நிரந்தர நியமனம் கிடைக்கும் என்ற ஒரே நம்பிக்கையுடனேயே தொடர்ந்தும் பல்வேறு சிரமங்களையும் தாங்கிக்கொண்டு பணியாற்றி வருகின்றனர். இவர்களின் சேவை அளப்பரியதாக உள்ளது.

போதியளவு மருந்து வசதிகள் உள்ளன. மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு இல்லை. ஆயினும் அதனை பாதுகாப்பதற்குரிய எந்தவித களஞ்சிய

வருகின்றனர். அவர்களுக்கு சேவை வழங்க வேண்டும் என்று நாம் ஆசைப்படுகின்றோம். ஆனால் வைத்தியசாலையில் உள்ள நெருக்கடி நிலையால் சேவையினை செய்ய முடியாதுள்ளது.

இங்கு சேவை பெறவருவோர் போசாக்கற்ற உணவு உட்கொள்வதால் ஏற்படும் இரத்தச் சோகை மற்றும் சுவாசத்தொற்று நோய், போன்றவற்றிற்காகவே பெருமளவு நோயாளர்கள் வருகின்றனர்.

**டாக்டர் மகேந்திரம் (பதிவு வைத்திய அதிகாரி, ஓய்வு பெற்று மீள் நியமனம் ஒட்டுசுட்டான் மத்திய மருந்தகம்)**

உடையார்கட்டு அவசர முதலுதவிச் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை நடைபெறும் நாளில் சராசரி

## அவலப்படும் மக்களின் கேள்வி

இருநூற்றைம்பது பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். வாரத்தில் இரண்டு தினங்களுக்கே இங்கு சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் சராசரியாக நாளொன்றுக்கு எண்ணூறுக்கும் மேற்பட்டோருக்கு சிகிச்சை வழங்கப்பட்டது.

இந்த வைத்தியசாலை அமைந்துள்ள கட்டடம் எமக்குச் சொந்தமானது அல்ல. மக்களுக்கு வைத்தியசேவை கிடைக்க வேண்டும் என்பதற்காக கட்டட உரிமையாளர்கள் இதனைத் தந்துதவி உள்ளார்கள்.

பொது மக்களின் உதவியுடனேயே தற்போது இவ்வைத்தியசாலையை இயங்க வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வைத்தியசாலையில் ஆளணி வசதிகள் எதுவுமே இல்லை. இந்த மக்களின் வைத்தியத் தேவையை உணர்ந்து அவர்களுக்கு என்னாலான உதவிகளைச் செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக பெரும் சிரமங்களின் மத்தியில் இங்கு மேலதிகமாக வந்துபணியாற்றி வருகின்றேன்.

ஒரேயொரு மருந்தாளர் மட்டும் தன் சிரமங்கள் எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டு புதுக்குடியிருப்பில்

வசதியும் இல்லை. மழைநேரத்தில் அவற்றை பாதுகாப்பதென்பது மிகவும் கஷ்டமான காரியம். வைத்திய உபகரணங்கள் இல்லை. தளபாடவசதிகள் எதுவும் இல்லை. சிலவேளைகளில் பாயில் அமர்ந்து பதிவுகளை மேற்கொள்ள வேண்டிய நிலை கூட ஏற்பட்டுள்ளது.

இந்தவைத்தியசாலையை ஒரேயொரு காவலாளி மட்டும் இரவில் இங்குள்ள மருந்து வகைகளையும் ஓரிரு தளபாடங்களையும் பாதுகாத்து வருகின்றார். அவருக்கும் எதுவித கொடுப்பனவும் வழங்கப்படுவதில்லை. முதியவரான இக்காவலாளி பெரும் சிரமத்தின் மத்தியிலேயே இப்பணியைச் செய்து வருகின்றார்.

இங்கு கிராமிய வைத்தியசாலைக்குரிய சேவைகள் ஓரளவுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. வெளிநோயாளர் பிரிவு மட்டுமே இயங்கி வருகின்றது. இதற்கும் மேற்பட்ட அவசர சிகிச்சைக்குரியவர்களை புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்கு அனுப்புகின்றோம்.

பெரும்பாலும் வருகின்றவர்களுக்கு முடிந்தளவு சிகிச்சைகளை



சீருடையற்ற தொண்டர்கள்

அல்லது தருமபுரம் மருத்துவமனைக்கோ செல்ல வேண்டும். அங்கு வாகனத்தில் பயணித்துச் செல்லும் போது அவ்வைத்தியசாலைகளில் சிகிச்சை வழங்குவதற்கான பதிவுகள் முடிவடைந்து விடும். இதனால் அவர்கள் மீளத்திரும்ப வேண்டிய நிலையே ஏற்படுகிறது.

**மாணிக்கம் இராஜரட்ணம் (புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மருந்தாளர்)**

இவ்வைத்தியசாலைக்கு வருவோர் இங்கு சிகிச்சை பெறமுடியாது விட்டால் புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்கோ

தி.ஜெயக்குமார்
பொ.சிவறஞ்சன்

சுகாதாரத் தொண்டர்களாக பணியாற்றுபவர்கள் ஆரம்பத்தில் சீருடை அணிந்து வந்தார்கள். அவர்களுக்கான சீருடைக் கொடுப்பனவோ ஊதியக்கொடுப்பனவோ வழங்கப்படாத நிலையில் சாதாரண கலர் உடையிலேயே

**தம்பு விநாயகமூர்த்தி (கிராம முன்னேற்றச்சங்கம்)**

தேவிபுரம், வள்ளிபுனம், சுதந்திரபுரம், உடையார் கட்டுதெற்கு, உடையார்கட்டு வடக்கு, மூங்கிலாறு தேராவில், றெட்பானா ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய பெரும் தொகையான ஏழை மக்கள் இவ்வைத்திசாலையை நம்பி உள்ளனர்.

இவர்கள் காலையில் பேருந்தில் புதுக்குடியிருப்பு, தருமபுரம் மருத்துவமனைகளுக்குச் சென்றாலும் அங்கும் பெருமளவான நோயாளர்கள் இருப்பதால் காலதாமதம் காரணமாக சிகிச்சை பெறமுடியாத நிலை ஏற்படுகிறது.

எமது மருத்துவமனையின் தேவைகுறித்து பல்வேறு தரப்பினரிடமும் பொது மக்கள் சார்பாக நாம் கோரிக்கை சமர்ப்பித்திருந்தோம். ஆயினும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை. இது எமக்குப் பெரும் வேதனையளிக்கின்றது.எனத் தெரிவித்தார்.

* * *

ஆகவே இப்பகுதியில் நிரந்தரமான மருத்துவமனை ஒன்றை நிறுவி இப்பகுதி மக்களின் வைத்திய தேவையினைப் பூர்த்தி செய்வதற்கு சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அது இம்மக்களுக்கு செய்யும் பேருதவியாகவும் அமையும் என்பது திண்ணம்.

# சேதுசமுத்திரத்திட்டம் குறித்து சிறிலங்காவுக்கு கூடுதலான தொழில் நுட்பத்தகவல்கள் வழங்கப்படும்

### -இந்திய வெளியுறவுச் செயலர்

சேதுசமுத்திரத் திட்டம் தொடர்பாக கூடுதலான விடயங்களை சிறிலங்காவுக்கு வழங்குவதற்கு இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளது. சிறிலங்காவுக்கு விஜயம் செய்துள்ள இந்திய வெளியுறவுத் துறை அமைச்சின் செயலாளர் ஷியாம் சரண் தனது சிறிலங்கா விஜயம் குறித்து நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனை தெரிவித்துள்ளார். இலங்கைக்கு விஜயம் செய்த ஷியாம் சரண் தனது நான்கு நாள் விஜயத்தை நிறைவு செய்து கொண்டு நேற்று முன்தினம் இந்தியா திரும்பினார். இருதரப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக அமைந்திருந்ததாக குறிப்பிட்டுள்ள சரண் சேது சமுத்திரத் திட்டம் தொடர்பில் கூடுதலான தொழில்நுட்ப தகவல்களை வழங்குமாறு சிறிலங்கா அதிகாரிகள் தம்மிடம் கோரியதாகவும் இதற்கு தாங்கள் ஒத்துழைப்பு வழங்குவதாக உறுதியளித்திருப்பதாகவும் ஷியாம் சரண் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சீன அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படவிருந்த நுரைச் சோலை அனல் மின் நிலையத்திட்டத்தை இந்தியாவிற்கு வழங்குவதற்கு சிறிலங்கா அரசாங்கம் உறுதியளித்துள்ளது. இந்திய அனல் மின்சக்தி கூட்டுத்தபானத்தின் ஊடாக நுரைச்சோலை அனல்மின் நிலையத்தை முன்னெடுக்க இணக்கம் காணப்பட்டுள்ள போதிலும் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த அனல் மின் நிலையத் திட்டத்தின் பெயர் குறிப்பிடப்படவில்லை இதேவேளை கொழும்பு மாத்தறை தொடருந்து பாதையின் புனரமைப்புப் பணிகளுக்கு உதவுவதற்கும் இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளது.





இத்தாலியின் நாப்போலி மாநிலத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெற்ற தியாகி அன்னை பூபதியின் 17 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வும் மாமனிதர் சிவராமின் இரங்கல் நிகழ்வும்.

# தியாகி அன்னைபூபதி நினைவாக அவுஸ்-மெல்பேர்னில் தமிழிசை விழா

### -மாமனிதர் சிவராமிற்கு இரங்கல்

இந்திய ஆக்கிரமிப்பு படைகளுக்கெதிராக உண்ணாவிரதமிருந்து தியாக மரணமடைந்த அன்னை பூபதியின் நினைவாக அவுஸ்திரேலியா மெல்பேர்ன் நகரில் தமிழிசை விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் மெல்பேர்னில் உள்ள முன்னணி சங்கீத ஆசிரியர்கள் திருமதி ரமா சிவராஜா, திருமதி நர்மதா ரவிச்சந்திரா மற்றும் திருமதி சிறீகாந்தி சற்குணம் ஆகியோரின் மாணவர்கள் வழங்கிய தமிழ் பாடல்களுடன், பிரபல இந்திய பாடகர் ஓ.எஸ். அருண் அவர்களின் தமிழிசைப் பாடல்களும் இடம்பெற்றன. ஓ.எஸ் அருண் அவர்கள் ஆழிப் பேரலை பற்றிப் பாடிய பாடல் அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது.




இந்நிகழ்வில் அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கும், தமிழ் மண்ணையும், தமிழ் மக்களையும் தமிழ்த்தேசியத்தினையும் நேசித்ததனால் மரணத்தைத் தழுவிக்கொண்ட மாமனிதர் சிவராம் அவர்களின் திருவுருவப்படத்திற்கும் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

சிறப்புரைகளை தமிழ்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜோசப் பரராஜ சிங்கம் மற்றும் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் ஆற்றினர்.

# கே.என். சொக்சியின் நியமனத்திற்கு ஆளும் கட்சிக்குள் எதிர்ப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உயர்பதவிகளுக்கான தெரிவுக்குழுவிற்கு பாராளுமன்ற உறுப்பினர் கே.என்.சொக்சி நியமிக்கப்பட்டிருப்பது தொடர்பில் ஆளும்கட்சியிலுள்ள சிலரால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் பாராளுமன்ற கூட்டத்தின் போது ஆளும் கட்சி அமைப்பாளர் அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே தமது எதிர்ப்பைத் தெரிவித்ததோடு தம்மால் இந்த நியமனத்தை ஏற்றுக்கொள்ள முடியாதெனத் தெரிவித்தார். சபாநாயகர் லொக்குபண்டார அந்தப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டதன் பின் அவருடைய வெற்றிடத்தை நிரப்புவதற்காக கே.என் சொக்சி நியமிக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (32)




சர்வதேச சுதந்திர ஊடக தினமாகிய நேற்றுமுன்தினம் சிறிலங்காவின் தலைநகர் கொழும்பில் மாமனிதர் தர்மரட்ணம் சிவராமின் படுகொலையைக் கண்டித்து நூற்றுக்கணக்கான பத்திரிகையாளர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் செய்த போது.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

# பதவி வெற்றிடங்கள்

கீழ் வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 27.05.2005 அன்று வரைக்கும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

01)பதவி:-எழுது வினைஞர் (ஒப்பந்த அடிப்படை)

சம்பளம்: ரூபா 9725/= நிலையானது) அத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும், இதர படிகளும் வழங்கப்படும்.

கல்வித்தகைமைகள்:- க.பொ.த (சாதாரணதரம்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஐந்து திறமைச்சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். திறமைச்சித்திகளில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி அல்லது இலக்கியம் மற்றும் எண்கணிதம்/ கணிதம்/வர்த்தக எண்கணிதம் என்பன அடங்கியிருத்தல் வேண்டும்.

வயது:- 45 வயதுக்கு மேற்படலாகாது.

தெரிவு:- பரீட்சையும் நேர்முகத்தேர்வும்

02பதவி:- தொழிலாளி தரம் 111 (ஒப்பந்த அடிப்படை)

தகைமை:-எட்டாந்தரத்தில் சித்தி

சம்பளம்:- ரூபா.8120/= அத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ங்கீகரிக்கப்படும், இதர படிகளும் வழங்கப்படும்.

வயது:- 18-45

தெரிவு:- பரீட்சையும் நேர்முகத்தேர்வும்

03)பதவி:- தொழிலாளி தரம் 111 (நிரந்தரம்)

தகைமை:-எட்டாந்தரத்தில் சித்தி

சம்பளம்: ரூபா 8870/= 3X80-9110/= ரூபா 8120/= சம்பள படியில் 31.12.2005 வரைக்கும் வைக்கப்படுவர். அத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும், இதர படிகளும் வழங்கப்படும்.

வயது:- 18-45

தெரிவு:- பரீட்சையும் நேர்முகத்தேர்வும்

ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனி விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

மக்கள் வங்கியின் யாழ்.பல்கலைக்கழகக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதியாளரிடம் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூபா 20 ஐ செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள ஸ்தாபனக் கிளையின் சிரேஸ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களையும் இதர விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் படிவங்களையும் இதர விபரங்களையும் பெறவிரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளர் பெயரில் பெறப்பட்ட ரூபா.20/= பெறுமதியான காசுக்கட்டளை அல்லது தபால் கட்டளையுடன் 23X10 ச.மீ அளவுடைய சுயமுகவரியிட்ட முத்திரையொட்டப்பட்ட தபால் உறையை அனுப்புதல் வேண்டும்.

அரச திணைக்களங்கள் அல்லது கூட்டுத்தாபனங்களில் கடமையாற்றும் விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் நியமன அதிகாரியினூடாக அனுப்பிவைத்தல் வேண்டும். சேவையில் இருப்பவர்களுக்கு மேற்குறிப்பிட்ட வயது எல்லை பொருந்தாது.

விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும். விபரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

*பதிவாளர்,*
*யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்,*
*02. 05. 2005*

*(சி.11861)*

# பாராளுமன்ற கூட்டத்தொடர் புறக்கணிப்பு

## பாரதீய ஜனதாக் கூட்டணி முடிவு

(புதுடில்லி)

**மாட்டுத்தீவன ஊழல் வழக்கில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்ட மத்திய மந்திரி பிரசாத்தை நீக்கக் கோரியும் ஊழல் பிரச்சினைகளை எழுப்ப எதிர்க்கட்சிகளுக்கு அனுமதி வழங்கப்படாததைக் கண்டித்தும் பாரதிய ஜனதாக் கூட்டணிக் கட்சிகள் பாராளுமன்ற புறக்கணிப்புப் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபடமுடிவு செய்துள்ளனர்.**

கடந்த 2 ஆம் திகதி நிதி மசோதா விவாதத்தில்மட்டும் பா.ஜனதா கூட்டணி கட்சிகள் கலந்துகொண்டன. நேற்று முன்தினம் பாராளுமன்ற கூட்டத்தை பா.ஜனதாக் கூட்டணி புறக்கணித்தது.

இந்த நிலையில் பாராளுமன்றத்துக்கு வரும்படி சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜி மீண்டும் அழைப்பு விடுத்தார். தேசிய சனநாயகக் கூட்டணியின் முடிவை மறுபரிசீலணை செய்யும்படியும் சோம்நாத் சட்டர்ஜி வேண்டுகோள் விடுத்தார்.

இதைத்தொடர்ந்து அடுத்தகட்ட நடவடிக்கை பற்றி முடிவு எடுக்க தேசிய சனநாயக கூட்டணியின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பாராளுமன்றக்கூட்டப் புறக்கணிப்புப் போராட்டம் முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அதற்கு மாறாக வரவு செலவுத்திட்ட கூட்டத் தொடர் முழுவதும் பாராளுமன்றக் கூட்டத்தைப் புறக்கணிப்பது என்று பா.ஜனதா கூட்டணிதலைவர்கள் முடிவு எடுத்தனர்.

பட்ஜெட் கூட்டத்தொடர் வரும் 13ஆம் திகதி வரை நடக்கிறது அது வரை பாராளுமன்றத்தின் இரு சபைகளையும் பா.ஜனதா கூட்டணி புறக்கணிக்கும்.

# வரதட்சணை பெற்றால் கணக்குக் காட்டவேண்டும்

(புதுடில்லி)

பணியில் சேர்வதற்கு முன்பாக எவ்வளவு வரதட்சணை வாங்கினார்கள் என்ற விபரத்தை அரச ஊழியர்களிடமிருந்து பெறுவது குறித்து பரிசீலிக்குமாறு மத்திய,மாநில அரசுகளை இந்திய உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. இப்பரிந்துரையை அரசு ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில்,அரசு ஊழியர்களும் அரச வேலையில் சேர விரும்புபவர்களும் தாங்கள் பெற்ற வரதட்சணை தொடர்பான விபரங்களை வழங்க வேண்டியிருக்கும்.அத்தொகை மனைவியின் பெயருக்கு மாற்றப்பட்டதா என்பது குறித்த விபரத்தையும் வழங்கவேண்டியிருக்கும்.

இது தொடர்பான விதிமுறைகளை உருவாக்க முடியுமா, என்பது குறித்து பரிசீலணை செய்யுமாறு மத்திய,மாநில அரசுகளை அறிவுறுத்துகிறோம் என தலைமை நீதிபதி ஆர்.சி.லஹோதி, நீதிபதிகள் ஜி.பி.மாத்தூர், பி.கே பாலசுப்பிரமணியம் ஆகியோர் கூறினர்.வரதட்சணை பெற்றது தெரிய வந்தால், அத்தொகையை மனைவியிடம் ஒப்படைக்க முடியமா என்பது குறித்தும் பரிசீலணை செய்ய வேண்டும் எனவும் நீதிபதிகள் கூறினர்.

வரதட்சணை ஒழிப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டு 43 ஆண்டுகள் ஆன போதிலும்கூட, அதைத் தீவிரமாக நடைமுறைப்படுத்துவதில் மத்திய, மாநில அரசுகள் தோல்வியடைந்துவிட்டன. வரதட்சணை அச்சுறுத்தல் இன்னமும் தொடர்கிறது எனத் தெரிவித்த நீதிபதிகள், வரதட்சணை ஒழிப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தீவிர நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென வலியுறுத்தினர்.



தமிழக ஆசிரியர் கூட்டணி சார்பில் 25 அம்ச கோரிக்கையை வலியுறுத்தி சென்னை சேப்பாக்கம் அரசு விருந்தினர் விடுதி எதிரில் நடந்த உண்ணாவிரத்தை தி.மு.க பொதுச் செயலாளர் க. அன்பழகன் தொடக்கிவைத்துப் பேசுகின்றார்.

# சுனாமியின் பின் அந்தமானில் சுற்றுலாப்பயணிகள் வருகை வீழ்ச்சி

(புதுடில்லி)

சுனாமித் தாக்குதலுக்குப் பின்பு சுற்றுலாப் பயணிகள் வருகை குறைந்துவிட்டதால் அந்தமான் சுற்றுலாத் துறைக்கு நாள் ஒன்றுக்கு 30 லட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக இந்திய மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் ரேணுகா சௌத்திரி மாநிலங்களவையில் செவ்வாய்க் கிழமை தெரிவித்தார்.

சுனாமி பாதித்த மாநிலங்களில் சுற்றுலாவை மேம்படுத்த புதிய உத்திகள் வகுக்கப்பட்டு செயற்படுத்தப்படவுள்ளன.

சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக பெருநகரங்களில் இரவு நேர விடுதிகளைத் திறக்கும் புதிய திட்டத்தை சுற்றுலாத்துறை செயற்படுத்தி வருகிறது. இந்த ஆண்டு சனவரியில் மும்பையிலும்,மார்ச்சில் டில்லியிலும் இரவு விடுதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. சுற்றுலா வரும் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்துதரவும், அவர்களுக்கு உதவவும் தேசிய ஆலோசனைக்குழு நிறுவப்பட்டுள்ளது.

கடந்த 2004 நவம்பர் முதல் 2005 மார்ச் வரை இந்தியாவுக்கு 18 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். 2004 இல் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 20 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

டில்லியில் 2010இல் அணிசேரா நாடுகளின விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதையொட்டி உணவகங்கள் தங்கும் விடுதிகள் உள்ளிட்டவற்றை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஐ.டி.சி.க்கு 850 கோடி வரி கொடுப்பனவு; பா.ஜ.க.தலைவர்கள் பெயரை வெளியிட வற்புறுத்து

(புதுடில்லி)

ஐ.டி.சி நிறுவனத்திற்கு 850 கோடி ரூபா வரிகொடுப்பனவை இரத்துச் செய்வதற்கு ஆதரவு திரட்டிய பா.ஜ.க.கூட்டணி தலைவர்கள் இருவரின் பெயர்களை வெளியிடக் கோரி ஆளும் காங்கிரஸ் கூட்டணியைச் சேர்ந்த எம்.பி.க்கள் மக்களவையில் அமளியில் ஈடுபட்டனர்.

மக்களவையில் செவ்வாய்க் கிழமை இடைவேளைக்கு முன்பாக காங்கிரஸ் உறுப்பினர் பி.கே. பன்சால் இந்தப் பிரச்சினையை எழுப்பினார்.

ஐ.டி.சி.நிறுவனத்திடம் இருந்து வரிக்கொடுப்பனவை வசூலிப்பதற்கு அவசரச்சட்டம் கொண்டுவர வேண்டாம் என பா.ஜ.க கூட்டணித் தலைவர் இருவர் அரசுக்குக்கடிதம் எழுதியதாக திங்கட்கிழமை மக்களைவையில் பேசும்போது நிதியமைச்சர் ப.சிதம்பரம் கூறியதைச் சுட்டிக்காட்டினார் பன்சால்.

முன்னாள் தேசிய சனநாயகக் கூட்டணி அமைச்சர்கள் முரளி மனோகர் ஜோஷி, ஜோர்ஜ் பெர்னாண்டஸ் ஆகியோரது பெயர்கள் இதில் இழுத்துப் பேசப்படுவதால், உண்மை என்ன என்பதை நிதியமைச்சரிடம் இருந்து தெரிந்துகொள்ளும் உரிமை உறுப்பினர்களுக்கு இருக்கிறது என பன்சால் குறிப்பிட்டார்.

பெயர்களை வெளியிடுமாறு நிதியமைச்சர் சிதம்பரத்திடம் கூறுமாறு மக்களவைத் தலைவர் சோம்நாத் சட்டர்ஜியிடம் பன்சால் கோரினார். இதற்கு, நிதியமைச்சரைத் தான் கட்டாயப்படுத்த முடியாது என்றும், உறுப்பினர்கள்தான் நிதியமைச்சரிடம் இதை வலியுறுத்த வேண்டும் என்றும் சோம்நாத் சட்டர்ஜி பதிலளித்தார்.

இதையடுத்து பன்சாலும் வேறு சில பாராளுமன்ற உறுப்பினர்கள் சேர்ந்து இந்தக்கோரிக்கையை வலியுறுத்தி கூச்சல் எழுப்பினர்.

அப்போது குறுக்கிட்ட ரயில்வே அமைச்சர் லல்லுப்பிரசாத், உறுப்பினர்களின் உணர்வை நிதியமைச்சரிடம் தெரிவிப்பதாகவும், அதன் மூலம் அவர் பெயர்களை வெளியிட்டாலும் வெளியிடலாம் என்றும் கூறினார்.

எனினும், காங்கிரஸ்,ஆர்ஜேடி, மார்க்சிஸ்ட் கட்சிகளின் உறுப்பினர்கள் கோரிக்கைக்கு செவிசாய்க்குமாறு சோம்நாத் சட்டர்ஜியை வலியுறுத்தி தொடர்ந்து கூச்சலிட்டனர்.



இந்தியாவில் வெளிநாட்டினர் மனதைக் கொள்ளை கொண்ட வட்டக்கானல் அருவி

# மூன்று கைதிகள் பரிதாப மரணம்

(சென்னை)

புதுச்சேரி மத்தியசிறையில் போத்தல்களில் இருந்த திரவத்தைக் குடித்த கைதிகள் மூன்று பேர் மரணமடைந்துள்ளனர். ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புதுச்சேரி மத்தியசிறையில் அடைக்கப்பட்டிருந்த விசாரணைக்கைதிகள் மூவர் நேற்று முன்தினம் குளியல் அறைக்குள் சென்றனர். குளித்துவிட்டு வந்த சிறிது நேரத்தில் மூவரும் மயங்கிவிழுந்தனர். அதிர்ச்சியடைந்த சிறைக்காவலர்கள் மூவரையும் அரசபொது மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். செல்லும் வழியிலேயே அவர்கள் மூவரும் உயிரிழந்தனர். சிறையிலுள்ள குளியல் அறைக்கூரையின் மேல் போத்தல்களில் இருந்த திரவத்தை எடுத்து குடித்ததாலேயே இவர்கள் மரணமடைந் துள்ளார்கள். போத்தல்களில் இருந்தது சாராயமா அல்லது விஷமா போன்ற விடயங்கள் குறித்து பொலிசார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.

# ஜம்மு-காஷ்மீரில் சண்டை; ஆறு தீவிரவாதிகள் பலி

(ஜம்மு)

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் எல்லைப் பகுதியில் பாகிஸ்தானிலிருந்து ஊடுருவ முயன்ற லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகள் ஆறுபேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.பூஞ்ச் மாவட்டத்தில் திங்கட்கிழமை இரவு இந்தச் சம்பவம் நடந்தது.

பாகிஸ்தானிலிருந்து இந்திய எல்லைப்பகுதிக்குள் தீவிரவாதிகள் ஊடுருவுவதாக வந்த தகவலையடுத்து ராணுவத்தினர் உஷார்படுத்தப்பட்டனர். இந்தியஎல்லைக்குள் ஊடுருவமுயன்ற தீவிரவாதிகளுக்கும். இராணுவத்தினருக்கும் ஐந்துமணி நேரம் கடும் சண்டை நடந்தது. இதில் லஷ்கர்-இ-தொய்பாக அமைப்பைச் சேர்ந்த ஆறு தீவிரவாதிகள் சம்பவ இடத்திலேயே இறந்தனர். எஞ்சிய தீவிரவாதிகள் தப்பியோடிவிட்டனர்.

# கருவிலேயே பெண் சிசு அழிப்பு; தண்டனையை அதிகரிக்க பரிசீலனை

(புதுடில்லி)

கருவிலேயே பெண்குழந்தைகளை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவோருக்குத் தண்டனையை அதிகரிப்பது குறித்து இந்திய அரசு பரிசீலித்து வருவதாக சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் மக்களவையில் தெரிவித்தார்.

நாட்டில் கருவிலேயே பெண் குழந்தைகளைக் கண்டறிந்து அழிக்கும்போக்கு அதிகரித்து வருவது குறித்து கவலை தெரிவித்து இந்திய கம்யூனிட்டு கட்சி உறுப்பினர் குருதாஸ் தாஸ்குப்தா மக்களவையில் செவ்வாய்க்கிழமை கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தார்.

அதற்குப்பதிலளித்துப் பேசுகையில் அன்புமணி ராமதாஸ் இவ்வாறு கூறினார்.

# நிலநடுக்கம்

(புதுடில்லி)

அசாம்-மேகாலய மாநில எல்லைப் பகுதியில் செவ்வாய்க் கிழமை அதிகாலை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது.

ரிச்டர் கருவியில் 3.8 என இந்த நிலநடுக்கம் பதிவாகி இருந்ததாக ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் உயிர்ச் சேதமோ, பொருட் சேதமோ ஏற்பட்டதாகத் தகவலில்லை.



நத்தம் அருகே மதுக்காரன்பட்டியில் நடந்த ஜல்லிக்கட்டு விழாவில் பாய்ந்து வரும் காளையையும், அதை அடக்க வீரர்கள் சுற்றி வளைப்பதையும் படத்தில காணலாம்.

# அன்டிகுவா டெஸ்ட்; எட்டு வீரர்கள் சதம் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவு



தென்னாபிரிக்க-மேற்கிந்தியத்தீவு அணிகளுக்கிடையில் அன்டிகுவாவில் நடைபெற்ற நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி எதிர்பார்க்கப்பட்டவாறே வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்துள்ளது.

முதல் இன்னிங்சில் தென்னாபிரிக்கா பெற்ற 588 ஓட்டங்களுக்கு பதிலளித்து ஆடிய மேற்கிந்தியத்தீவு தனது முதல் இன்னிங்சிற்காக 747 ஓட்டங்களை குவித்து அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

போட்டியின் இறுதி நாளான நேற்று 565 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுக்கள் என்ற நிலையில் தொடர்ந்த மேற்கிந்தியத்தீவு சந்தர்போல், பிராவோ ஆகியோரின் சதத்துடன் ஓட்ட எண்ணிக்கையைமேலும்அதிகரித்தது. துடுப்பாட்டத்தில் கெய்ல்ஸ் 317, சர்வான் 127 சந்தர்போல் 127, பிராவோ 107 ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் வில்லியர்ஸ் இரண்டு விக்கெட்டையும், சொண்டகி மூன்று விக்கெட்டையும் கைப்பற்றினர்.

மேற்படி போட்டியில் எட்டு வீரர்கள் சதமடித்தமை குறிப்பிடத்தக்கது.



ஏற்கனவே 26-0 என்ற நிலையில் தென்னாபிரிக்கா டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியிருந்தது. டெஸ்ட் தொடர் நாயகனாக சிமித்தும், ஆட்ட நாயகனாக கிறிஸ் கெய்ல்ஸ் தெரிவாகினர்.

# முதல்தர பந்து வீச்சாளராக திகழ பிரெட்லீ விருப்பம்



கணுக்கால் காயம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள வேகப்பந்து வீச்சாளர் பிரெட் லீ அவுஸ்திரேலியப் பந்து வீச்சாளர்களில் முதலிடத்தைப் பெற விருப்பம் தெரிவித்துள்ளார்.

கணுக்கால் காயம் காரணமாக டெஸ்ட் போட்டிகளில் 16 மாதங்களாக இடம் பெறாதது உண்மையிலேயே ஏமாற்றமாகத்தான் உள்ளது. ஆனால் அணி சிறப்பாகவே ஆடி வருகிறது. அணியில் இடம்பெறுவதற்காக கடினமாக உழைத்து வருகிறேன்.

காயம் முழுமையாக குணம் ஆக வேண்டும். விக்கெட்டுக்களை வீழ்த்த வேண்டும். அதே சமயம் பந்து வீச்சில் முந்தைய வேகமும் இருக்க வேண்டும் என்ற மூன்று அம்சங்களை தேர்வாளர்கள் எதிர்பார்க்கின்றனர் அவை அனைத்தையுமே தற்போது நிறைவேற்றி வருகிறேன். கடந்த இரண்டு தினப்போட்டிகளில் கூட நான்தான் அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றினேன். அவர்களது எதிர்பார்ப்பை நிவர்த்தி செய்து வருகிறேன். அத்துடன் அவுஸ்திரேலியாவின் சிறந்த பந்து வீச்சாளராகத் திகழ வேண்டும் என்ற ஆசையும் கொண்டுள்ளேன் என்றார்.

# டெண்டுல்கர் ஓய்வு பெறவேண்டும் இணையத்தள கருத்துக் கணிப்பு தெரிவிப்பு




இந்திய அணியிலிருந்து டெண்டுல்கர் ஓய்வு பெற 63 சதவீதம் பேர் ஆதரவு அளித்துள்ளனர். அடித்தாடும் திறனை அவர் இழந்து விட்டதாக இணையத்தளம் நடத்திய கருத்துக்கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கியவர் சச்சின் டெண்டுல்கர் அவருக்கு இப்போது 32 வயது, அவர் 16 வயதிலேயே இந்திய அணியில் இடம்பெற்றார். தொடர்ந்து பல போட்டிகளில் ஓட்டங்களை குவித்தார். ரசிகர்களின் மனதில் இடம்பிடித்து புகழின் உச்சிக்கு சென்றார்.

ஆனால் சமீபகாலமாக டெண்டுல்கர் ஆட்டத்தில் பழைய அபார திறமையைக்காணமுடியவில்லை. ஒரு சில ஓட்டம் எடுத்தவுடன் அவுட்டாகி விடுகிறார். நிலைத்து நிற்கவும் முடியவில்லை நிறைய ஓட்டம் குவிக்கவும் அவரால் இயலவில்லை. கடந்த மாதங்களில் பாகிஸ்தானுடன் ஆடியபோதும் டெண்டுல்கர் சோபிக்கவில்லை.

இந்த நிலையில் தனியார் இணையத்தளம் ஒன்று டெண்டுல்கர் ஆட்டத்திறன் குறித்து ரசிகர்கள் மத்தியில் கருத்துக்கணிப்பு ஒன்றை நடத்தியது. 22 ஆயிரம் ரசிகர்களிடம் கருத்துகேட்டறியப்பட்டது. அதில் 63 சதவீதம் பேர், டெண்டுல்கர் இப்போது பழைய டெண்டுல்கராக இல்லை. அடித்தாடும் திறனை அவர் இழந்து விட்டார். எனவே அவர் ஓய்வு பெறுவதே நல்லது" என்று கருத்துத்தெரிவித்துள்ளனர். டெண்டுல்கர் தொடர்ந்து இந்திய அணியில் நீடிக்கவேண்டும் என்று 37 சதவீதம் ரசிகர்கள் தான் அவருக்கு ஆதரவாகக் கருத்து கூறி இருக்கிறார்கள்.

# மே.தீவுக்கு எதிரான ஒருநாள்தொடர் நிக்கிபோயே இடம்பெறவில்லை



மேற்கிந்தியத்தீவுகளுடனான ஒரு நாள் போட்டிகளில் தென்னாபிரிக்க அணியின் உபதலைவர் நிக்கி போயே பங்கேற்கமாட்டார் என தெரிவிக்கப்படுகிறது.

அவர் நேற்று நடைபெற்று முடிந்த நான்காவது டெஸ்ட் போட்டியின்போது சுக வீனமுற்றதால் அவரை பரிசோதித்த வைத்தியர் அவர் சுவாசிக்க கஷ்ரப்படுவதாகக் கூறியதால் மைதானத்திருந்து அகற்றப்பட்டார் ஆட்டத்தின் முதல் நாளிலேயே அவருக்கு இப்பிரச்சினையேற்பட்டது. எனினும் அணியை வெற்றிக்கு கொண்டு செல்வதற்காக அவர் பங்கேற்பதாக தெரிவித்தார்.

இவரின் இடத்துக்கு யஸ்ரின் ஒன்டோங் வருகிறார் மற்றும் மொண்டே சாண்டகியும் வீடு செல்வதால் யஸ்ரின் கெம்ப் அணியில் இணைகிறார். ஜக்ஸ் றுடோல்ப்பும் அணியில் இடம்பெறவில்லை.




அணிவிபரம்:- கிரேம்ஸ்மித் (தலைவர்) மார்க் பவுச்சர், டிவில்லியர்ஸ், டிப்பென்னார், கிப்ஸ், அன்ருஹோல், கலிஸ், யஸ்ரின்கெம்ப், லாங்க்வெல்ட், நெல், என்ரினி, ஒன்டொங், பொலக், பிரின்ஸ்.

# சிறிலங்கா கிரிக்கெட் சபை பொலிசாரால் முற்றுகையிடப்பட்டது



சிறிலங்கா கிரிக்கெட் சபையில் நிதிமோசடி நடந்திருப்பதாக குற்றம் சாட்டப்பட்டு நேற்று முன்தினம் சபையின் நிறைவேற்றதிகாரியான முன்னாள் அணித்தலைவர் துலிப் மெண்டிஸ் பதவிவிலகுவதாக அறிவித்து சில மணி நேரத்தில் கிரிக்கெட்சபை அலுவலகத்தை பொலிசார் முற்றுகையிட்டதாகத்தெரிவிக்கப்படுகிறது.




சிறிலங்காவின் விளையாட்டுத்துறையமைச்சரான ஜீவன் குமாரதுங்க கடந்த மார்ச் மாதம் சபையை கலைத்து விட்டு இடைக்கால சபை ஒன்றை அமைத்தார். இதன்பின் கிரிக்கெட் சபைக்கும் அரசுக்குமிடையில் இழுபறிநிலை தோன்றியது. இதனையடுத்து துலிப்மெண்டிஸ் பதவிவிலகுவதாக அறிவித்தார். அவ்வறிவித்தல் கிடைத்த சில மணித்தியாலங்களில் பொலிசார் திடீரென அலுவலக வளாகத்துள் புகுந்தனர். இதனால் அங்கு பணியாற்றும் 20 பெண்களுட்பட ஊழியர்கள் அனைவரும் அச்சமுற்றுக் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படு கிறது. எனினும் எவரும் கைது செய்யப்படவில்லை என்றே இலங்கோன் என்ற அதிகாரி தெரிவித்துள்ளார்.



பேர்லினில் நடந்த ஜேர்மன் ஓபன் டென்னிஸ் போட்டியில். பெல்ஜியத்தின் கிம் கிளைஸ்டர்ஸ் 6-1, 6-0 என்ற நேர் செட்களில் எளிதாக உக்ரைன் வீராங்கனை யுலியனா பெடக்கை வீழ்த்தினார்.

# பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் கஸ்டோவ் கியூர்டன் விலகல்



பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் தொடரில் இருந்து முன்னணி வீரர் கஸ்டோவ் கியூர்டன் விலகினார்.

கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் தொடக்கம் இரண்டு வாரங்கள் மட்டுமே உள்ளன மூன்றுமுறை பிரெஞ்சு ஓபன் பட்டம் வென்ற பிரான்ஸ் வீரர் கஸ்டோவ் கியூர்டன் இம் முறை பங்கேற்க போவதில்லையாம். காரணம் அவர் தற்போது முழு உடல் தகுதியுடன் இல்லை. சமீபகாலமாக பங்கேற்ற போட்டிகளில் எல்லாம் அவருக்குத் தோல்விதான்.

"இப்போது முழுமையான உடல் தகுதியுடன் நான் இல்லை 50சதவீதம் திறமைதான் என்னால் வெளிப்படுத்த முடிகிறது. ஆகவே இம் முறை பிரெஞ்சு ஓபனில் பங்கேற்கப் போவதில்லை பங்கேற்றாலும், அடுத்த சுற்றுக்களுக்கு முன்னேற முடியாது என்பதை உணர முடிகின்றது. சிறிது காலம் தீவிர பயிற்சிக்குப் பிறகு மீண்டும் சர்வதேசக்களத்தில் குதிப்பேன் என்கிறார். கஸ்டோவ்.

# வெளிநாட்டுப் பயிற்சியாளர்களால் தெற்காசிய அணிகள் முன்னேற்றம்




"வெளிநாட்டுப் பயிற்சியாளர்கள் பயிற்சியில் இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம் கிரிக்கெட் அணிகளின் செயற்பாடுகள் முன்னேற்றம் கண்டுள்ளன என வசிம்அக்ரம் தெரிவித்துள்ளார். வெளிநாட்டுப் பயிற்சியாளர்கள் நியமிக்கப்படுகையில் வீரர்கள் நெருக்கடி இன்றி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துகின்றார்கள். அணி வீரர்கள் தேர்வு நிலையானதாக இருக்க வேண்டும். வீரர்களை அடிக்கடி மாற்றுவதால் அணியின் திறன் பாதிக்கப்படும்" என்று தெரிவித்தார்.

# வவுனியா வடக்கு கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி நெடுங்கேணி ம.வி.யில்

வவுனியா வடக்கு விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 08.05.2005 அன்று ஞாயிற்றுக்கிழமை நெடுங்கேணி மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கனகராயன்குளம் போறூட் நிறுவனத்தினரின் அனுசரணையுடன் வவுனியா வடக்கு பிரதேச செயலகம் ஒருங்கமைப்பு செய்துள்ள மேற்படி போட்டி வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமன் தலைமை தாங்குகின்றார்.இப்போட்டியின் சுவட்டு மைதான நிகழ்சிகள் ஏழாம்திகதி காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி இறுதிநாள் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இவ் மெய்வல்லுநர் போட்டிக்கு பிரதம விருந்தினர்களாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களான [illegible]ல்வம் அடைக்கால நாதன் ந.சிவசக்தி ஆனந்தன், சு.வினோநோகராதலிங்கம், [illegible] கிஷோர், ச.கனகரட்ணம் ஆகியோரும், சிறப்பு விருந்தினராக வவுனியா மாவட்ட [illegible] அதிபர் ச. சண்முகம், கௌரவ விருந்தினர்களாக வவுனியா மாவட்ட அரசியல்து[illegible] பொறுப்பாளர் பா. ஞானவேல் அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் [illegible] வலை வவுனியா [illegible] விளையாட்டுத்துறை பொறுப்பாளர் ம.தமிழ்மாறன் ஆகியோரும் [illegible] து கொள்ளவுள்[illegible]ர். (கு)

# தேசியக் கொடி பொறித்த ஹெல்மெட் கிரிக்கெட் வீரர்கள் அணியத்தடை

கிரிக்கெட் வீரர்கள் தேசியக் கொடி வரைந்த ஹெல்மெட் அணியக் கூடாது என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.


இந்திய நட்சத்திர கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் உள்ளிட்ட வீரர்கள் தேசியக் கொடி பொறித்த ஹெல்மெட்டுக்களைப் பயன்படுத்துகின்றனர். இது குறித்து மக்களவையில் நேற்று முன்தினம் எம்.பிக்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு மத்திய உள்துறை இணை அமைச்சர் மணி மணிக்ராவ் ஹோல்டா காவிட் தெரிவிக்கையில் தேசியக் கொடி அவமதிப்பு தடுப்புச் சட்டத்தின் கீழ் தேசியக் கொடி பொறித்த ஹெல்மெட்டுக்களை கிரிக்கெட் வீரர்கள் அணியக் கூடாது மேலும் தேசியக் கொடி வரைந்த உடைகளை அணிவதும் சட்டபூர்வமாக தடை செய்யப்பட்டிருக்கிறது என்றார்.

# உலக ஸ்நூக்கர் சம்பியனாக இங்கிலாந்து வீரர் ஷான் மர்பி

இங்கிலாந்து வீரர் ஷான் மர்பி உலக ஸ்நூக்கர் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளார். அவருக்கு ரூ. 2.05 கோடி பரிசு கிடைத்துள்ளது.

ஷெ.ீபீல்டில் திங்கட்கிழமை நடைபெற்ற விறுவிறுப்பான இறுதி ஆட்டத்தில் 22 வயதாகும் மர்பி 18-16 என்ற புள்ளிக்கணக்கில் வேல்ஸைச் சேர்ந்த மாத்யூ ஸ்டீவென்ஸைத் தோற்கடித்தார். 1979 இற்குப் பிறகு தகுதிச் சுற்று மூலம் முன்னேறிமர்பி பட்டம் வென்றார் முன்னதாக டெரி கிரி.ீபித்ஸ் 1979 இல் சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

உலகத் தரவரிசையில் 48ஆவது இடத்தில் உள்ள மர்பியிடம் அதிர்ச்சித் தோல்வியுற்ற ஸ்வென்ஸ் இப்போட்டித் தகுதி நிலையில் 6ஆவது இடத்தைப் பெற்றிருந்தார்.



## சிந்தனைக்கு

சொல்லுக்கு முன்னே எப்போதும் செயல் இருக்க வேண்டும். செயலால் தான் நாங்கள் செல்வாக்குப் பெற்றோம். செயல் தான் நமது நடவடிக்கைகளுக்கு அரசியல் வடிவம் தருகின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 05-05-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## அரிய சந்தர்ப்பம்

"நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கு கடந்த 20 ஆண்டுகளின் பின்னர் ஏற்பட்டுள்ள சரியான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பொன்றை துரிதமாக ஏற்படுத்தவுள்ளேன்" என்ற சனாதிபதி சந்திரிகாவின் அறிவிப்பு தற்போதைய அரசியல் யதார்த்தத்தின் நிர்ப்பந்தமாகும் அதாவது சனாதிபதி சந்திரிகா விரும்பியோ அன்றி விரும்பாமலோ இத்தகைய அறிவிப்பை வெளியிட வேண்டிய கட்டாயத்தில், நிர்ப்பந்தத்தில் உள்ளார் என்பதே ஆகும்.

சனாதிபதி சந்திரிகா தனது இவ் அறிவித்தலின் அடிப்படையில் விடுதலைப்புலிகளுடன் பொதுக்கட்டமைப்புத் தொடர்பானதொரு உடன்பாட்டிற்கு வருவாரேயானால், சமாதான முயற்சிகளில் நம்பிக்கை யூட்டக் கூடிய முன்னேற்றகரமானதொரு நடவடிக்கையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் சனாதிபதி சந்திரிகா தற்பொழுது பொதுக்கட்டமைப்புக் குறித்து வெளிப்படுத்தியுள்ள உறுதியான நிலைப்பாட்டின் பயனானது புலிகளுடன் இது தொடர்பான உடன்பாட்டில் கைச்சாத்திடல், அமுலாக்கம் என்பவற்றைக் கொண்டே தீர்மானிக்கப்படுபவையாக இருக்கும்.

சிறிலங்கா ஆட்சியாளர்கள் நெருக்கடிகள் குறிப்பாக சர்வதேச நாடுகள், உதவிவழங்குவோர் கொடுக்கும் நிர்ப்பந்தங்கள் அன்றி அவர்களின் எதிர்பார்க்கைகளுக்கு ஏற்ப பல விடயங்களில் அறிவிப்புக்களை வெளியிடுவதுண்டு. ஆனால் அவர்களின் அறிவிப்புக்கள் அவர்களின் நடவடிக்கைகளுடன் ஒத்திசைவானதாக இருந்ததில்லை.

இந்நிலையில் பொதுக்கட்டமைப்புக் குறித்த விடயத்திலும் வாக்குறுதிகளுக்கும் அப்பால் செயற்பாட்டைக் கொண்டே அரசின் நிலைப்பாட்டைத் தீர்மானிக்க முடியும். அவ்வாறு இல்லாதுவிடில் பொதுக்கட்டமைப்புக் கூட பேச்சளவிலானதாகவே இருந்துவிட வாய்ப்புண்டு ஆகையினால் இன்றைய நிலையில் நம்பிக்கை கொள்ள எதுவுமில்லை.

இது ஒருபுறம் இருக்க..., சமாதானத்தைக் கட்டி எழுப்ப 20 ஆண்டு காலப்பகுதியில் கிடைக்கப்பெற்ற அரிய சந்தர்ப்பம் என்ற அவரின் கூற்று பொருத்தப்பாடானதாக இருப்பினும் அதற்கு அவர் கூறியுள்ள காரணம் பொருத்தப்பாடானதாகக் கொள்ளத்தக்கதல்ல. அதாவது விடுதலைப் புலிகள் பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு உடன்பட்டுள்ளமையானது வரவேற்கத்தக்கதொன்றே ஆயினும், பொதுக்கட்டமைப்பினை இனப்பிரச்சினைத் தீர்விற்கான தீர்வுடன் சம்பந்தப்படுத்துவதோ, பொதுக்கட்டமைப்பின் எல்லைகள், வரையறைகள் இனப்பிரச்சினைத் தீர்விற்கான எல்லைகள் என்பவற்றுடன் தொடர்புபடுத்தப்படுவதோ பொருத்தப்பாடானதல்ல.

அதாவது சுனாமி அனர்த்த பேரழிவிற்கானபொதுக்கட்டமைப்பும்- இனப்பிரச்சினை தீர்விற்கான இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையும் வெவ்வேறானவை. இரண்டின் நோக்கம், தேவைகள் என்பன பல்வேறு வகைகளில் மாறுபாடானவை. சுனாமி அனர்த்த பொதுக் கட்டமைப்பானது குறுகிய காலப்பகுதிக்குள் இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட அழிவுகளிலிருந்து மக்களை மீட்டெடுத்து புனர்வாழ்வு நடவடிக்கைளைத் தொடரும் அமைப்பாகும்.

ஆனால் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை என்பது அவ்வாறானதொன்றல்ல. அங்கு வடக்குக் கிழக்கு நிர்வாகத்துடன் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டமக்களின் புனர்வாழ்வு, புனர் நிர்மாணத்துடன் தொடர்புபட்டதாகும். தமிழ் மக்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

சனாதிபதி சந்திரிகா கூறியுள்ளது போன்று சமாதானத்தை உருவாக்க 20 வருடகாலத்தில் கிடைத்துள்ளமை அரிய சந்தர்ப்பம் என்பதை ஏற்றுக்கொள்வதாக இருப்பினும் கூட ஓரிரு மணித்தியாலயத்தில் பேரழிவை ஏற்படுத்திய சுனாமி நிர்மாணப்பணிக்கு உருவாக்கப்படும் கட்டமைப்பும், 20 வருடயுத்தத்தின் மூலம் அழிவைச் சந்தித்துள்ளன. மக்களின் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிக்கும் இடையிலான வேறுபாடு வேறானது. அதாவது பொதுக்கட்டமைப்புப் போன்றதொரு அதிகாரமற்ற அமைப்பாக இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை இருக்க முடியாது.

இந்நிலையில் ஐம்பது வருடகால அரசியல், இராணுவ நெருக்கடிக்கும், சில மணிநேரத்தில் நிகழ்ந்துவிட்ட அனர்த்தத்திற்கும் ஒரே வரையறைக்குள் தீர்வுகாண்பதென்பது சாத்தியமானதல்ல. ஆனால் தற்போதைய நிலையில் பொதுக்கட்டமைப்பை உருவாக்கி சனாதிபதி சந்திரிகா முதலில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வழிக்க முற்பட்டும் இதனை அடிப்படையாகக் கொண்டு ஏனையவற்றைப் பின் பார்க்கலாம்.

# சனாதிபதி தேர்தலுக்கான பிரச்சாரம்

# மே-10 முதல் ஐ.தே.க. ஆரம்பிக்கும்

## நாடளாவிய ரீதியில் பிரச்சார நடவடிக்கை

(கொழும்பு)

சனாதிபதி தேர்தலுக்கான பிரச்சார நடவடிக்கைகளை ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதி காலை 10.00 மணியளவில் கொழும்பு கோட்டையிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகத்தில் பிரச்சார நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்நிலையில் நாடு முழுவதிலும் மாபெரும் பத்துத்தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களை நடத்துவதற்கு கட்சி தீர்மானம் எடுத்துள்ளது. இதற்கு ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமை தாங்குவார்.

மே மாதம் 15 ஆம் திகதி தம்புள்ள, 20 ஆம் திகதி பதுளை, 26 ஆம் திகதி எம்பிலிபிட்டியாவில் மாபெரும் பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெறுவதுடன் வீடு வீடாகச் சென்று தேர்தல் பிரச்சாரங்கள் செய்வதற்கும் கட்சி தீர்மானம் எடுத்துள்ளது.

# பிரதியமைச்சர் பதவி கிடைக்க இடையூறு இ.தொ.கா.உறுப்பினர் கட்சி தாவ முடிவு

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியில் உட்பூசல்கள் அதிகரித்துள்ளதாலும், கட்சித்தலைமைப் பீடத்துடன் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளதால் கண்டி மாவட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் கட்சியில் இருந்து ராஜினாமா செய்யப் போவதாக அறிவித்துள்ளார்.

அரசாங்கம் தமக்கு பிரதி அமைச்சர் பதவி வழங்குவதற்கு தீர்மானித்திருந்தது. இதை சிரேஷ்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் தடுத்து நிறுத்தியதால் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். இதை சமரசம் செய்வதற்கு இ.தொ.கா அரசியல் பீடம் எடுத்த முயற்சிகள் தோல்வியடைந் தமையால் தற்பொழுது இப்பிரதிநி ஐக்கிய தேசிய கட்சியுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# சிவராம் படுகொலையை கண்டித்து பல்வேறு நாடுகளில் கூட்டங்கள்

## பொது அமைப்புக்கள், ஊடகவியலாளர்கள் ஏற்பாடு

(கொழும்பு)

ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராம் (தராகி) படுகொலை சம்பந்தமாக உலக நாடுகள் பலவற்றில் கண்டனக் கூட்டங்களை நடத்துவதற்கு தமிழ் ஊடகவியலாளர்கள், பொது அமைப்புக்கள் தீர்மானம் எடுத்துள்ளன.

இதன் முதலாவது கண்டனக் கூட்டம் நாளை ஆறாம் திகதி பிரான்ஸ் முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.

இதன் போது நோர்வே, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் கூட்டங்கள் நடத்துவதற்குத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளது.

இதில் திரட்டப்படும் நிதி சிவராமின் குடும்பத்திற்கு வழங்குவதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# கவலையீனமாக செயற்படும் சாரதிகளை கைது செய்ய விசேட நடவடிக்கை

(கொழும்பு)

திருகோணமலை, கொழும்பு பிரதான வீதிகளில் கவலையீனமாக வாகனம் செலுத்தும் தனியார் பேருந்து சாரதிகளைக் கைது செய்யும் விசேட நடவடிக்கை ஒன்று நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளது. தம்புள்ள முதல் அம்பேபுச வரையிலான பகுதியில் இத்தகைய நடவடிக்கையை ஒரு வார காலத்துக்கு மேற்கொள்ளப்படுமென மக்கள் பாதுகாப்புச் சட்டம், மற்றும் சமாதானத்திற்கான பிரதியமைச்சர் ஜெயரெத்தின கேரத் தெரிவித்துள்ளார்.

தம்புள்ள, கொழும்பு வீதிகளிலேயே கூடுதலான விபத்துக்கள் இடம்பெறுகின்றது எனச் சுட்டிக்காட்டிய அவர், இதற்குக் காரணம் கவலையீனமாக வாகனம் செலுத்துதல், அளவுக்கதிகமான பயணிகளை ஏற்றிச் செல்லுதல், போதையில் வாகனம் ஓட்டுதல் போன்றவற்றாலேயே இவ்விபத்துக்கள் ஏற்படுகின்றது என்றார்.

மேற்குறித்த குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படுமிடத்து சாரதிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார். இந்தநடவடிக்கைக்கென 50 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதெனவும் தெரிவித்துள்ளார்.

## பம்பலப்பிட்டிப் பகுதியிலுள்ள

# தேவாலயம் மீதான தாக்குதலுக்கு நடவடிக்கை எடுக்க வலியுறுத்து

(கொழும்பு)

பம்பலப்பிட்டியில் உள்ள தேவாலயத்தின் மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை கிறிஸ்தவ அமைப்புகள் கண்டித்துள்ளன. பௌத்த பிக்கு ஒருவரும், ஐ.தே.க. பிரதேச சபைத் தலைவர் ஒருவரும் சேர்ந்த குழு ஒன்று இத்தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலின் போது ஆலயத்தின் போதகரின் மனைவி உட்பட பலர் காயமடைந்துள்ளனர். இப்பிரதேசத்தில் கடற்கோளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இத்தேவாலய போதகர் நிவாரண உதவிகளைச் செய்து வருகிறார். இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக பம்பலப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு அரசை வற்புறுத்துமாறு கிறிஸ்தவ அமைப்புகள் சர்வதேச சமூகத்திடமும் மனித உரிமைகள் அமைப்புகளிடமும் கோரிக்கை விடுத்துள்ளன.



காலி மாவட்டம் பெட்டிகலவத்த என்ற இடத்தில் மாமரம் ஒன்றின் அடிப்பாகத்தில் மாங்காய்கள் காய்த்திருப்பதை படத்தில் காண்க. அடிப்பாகத்தில் மரத்தைப் பிளந்து கொண்டு இந்த மாங்காய்கள் உருவாகியுள்ளன. மேற்படி பகுதி சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்டதென தெரிவிக்கப்படுகிறது.

# தலதா மாளிகைக்குள்பொலிசார் பிரவேசம்

## பௌத்த பீட மத குருக்கள் கண்டனம்

தலதாமாளிகைக்குள் பிரவேசித்த பொலிசாரை மாளிகையை விட்டு வெளியேறுமாறு மகாநாயக்க தேரர்கள் பணித்துள்ளனர் நேற்று முன்தினம் திடீரென 200 இற்கும் மேற்பட்ட பொலிசார் தலதாமாளிகைக்குள் பிரவேசித்ததையடுத்து தலதாமாளிகையின் பொறுப்பாளர்களான மல்வத்தை, மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் பக்தர்களுக்கு இடையூறு ஏற்படுவதால் உடனடியாக வெளியேறுமாறு பொலிசாரிடம் தெரிவித்துள்ளனர்.

தலதாமாளிகையின் பிரதான பதவியான தியவதன நிலமே பதவியிலிருக்கும் நிறன்ஜன் விஜேரட்னாவின் பதவிக்காலம் நேற்றோடு முடிவடைந்ததால் அந்த பதவிக்கு புதிய ஒருவரை தெரிவு செய்யும் வரை பௌத்த விவகாரங்கள் தொடர்பான ஆணையாளரால் தற் காலிகமாக தியவதன நிலமே ஒருவர் தெரிவு செய்யப்படவுள்ளார் எனத் தகவல்கள் வெளியானதையடுத்து தான் தற்காலிகமான தியவதன நிலமேயாக தெரிவு செய்யப்படாவிட்டால் தலதாமாளி கையின் திறப்பினை ஒப்படைக்க போவதில்லை என நிறன்ஜன் விஜேரட்னா தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து பதற்ற நிலை ஒன்று ஏற்படவுள்ளதாக தகவல்கள் கிடைத்தமையினாலேயே பொலிஸ் பாதுகாப்பை பலப்படுத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே தற்காலிக தியவதன நிலமேயாக வேறு ஒருவர் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அதற்கு தாம் ஒத்துழைப்பு வழங்கப்போவதில்லையென அஸ்கிரிய, மகாநாயக்கதேரர் தெரிவித்துள்ளார்.(32)

# எரிபொருட்களின் விலைகள் நள்ளிரவு முதல் அதிகரிப்பு

(கொழும்பு)

பெற்றோல்,டீசல் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்த விலைஅதிகரிப்பிற்கு அமைய பெற்றோல் லீற்றர் ஆறு ரூபாவினாலும், டீசல் நான்கு ரூபாவினாலும் மண்ணெண்ணெய் மூன்று ரூபாவினாலும் அதிகரித்துள்ளது.

இந்தவிலை அதிகரிப்பு நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் எனவும் இதுவரை நாட்டின் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறான விலையில்இருந்து வந்த இவற்றின் விலைகள் நாடுமுழுவதும் நேற்று நள்ளிரவு முதல் ஒரே விலையில் இருக்குமெனவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் ஜாலிய மெதகம அறிவித்துள்ளார்.

இதற்கமைய பெற்றோலின் விலை லீற்றர் ஒன்று 74 ரூபாவாகவும், டீசல் லீற்றர் 46 ரூபாவாகவும், மண்ணெண்ணெய் லீற்றர் 28 ரூபா ஐம்பது சதமாகவும் விற்பனை செய்யப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடஈராக்கில் தற்கொலை தாக்குதல்

## ஐம்பதிற்கும் அதிக குர்திஷ்கள் பலி!

ஈராக்கின் வடக்குப் பகுதியான குர்திஷ் இனமக்கள் வாழும் பிரதேசத்தில் பாரியதற்கொலை குண்டுத் தாக்குதலில் ஐம்பது பேருக்கும் அதிகமானோர் உடல்சிதறிப் பலியானதுடன் நூற்றி ஐம்பதிற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

ஈராக்கின் பிராந்திய அரசின் உட்துறை அலுவலகம் ஒன்றில் பொலிசாருக்கு ஆட்சேர்ப்பு நடைபெற இருந்த சமயம் இந்தத் தற்கொலை குண்டுத்தாரி தன்வசம் இருந்த குண்டை வெடிக்கவைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குண்டுதாரி தான் ஒரு தொண்டர் போன்று அந்த வளாகத்திற்குள் நுழைந்து பொலிஸ் படையில் சேர்வதற்காக காத்திருந்த இளைஞர்கள் மத்தியில் புகுந்ததாக குர்திஷ் அதிகாரிகள் கூறுகின்றனர்.






தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரான்ஸ் கிளையினரால் தலைநகர் பாரிஸில் கடந்த ஞாயிறன்று ஏற்பாடு செய்திருந்த மே தின நிகழ்வில்....

### தேசியத்....

ளது.

எமது தேசம் அந்நியர்களால் அடிமைப்படுத்தப்பட்டு மோசமான வாழ்நிலையைக் கொண்டிருந்த ஆரம்ப காலகட்டங்களில், அகிம்சை வழியிலான போராட்டங்களை முன்னெடுத்துச் சென்ற தமிழரசுக் கட்சியுடன் இணைந்து அரும்பாடு பட்டவர்களுள் கந்தையா குலசேகரம் அவர்களும் ஒருவர். இறுதியில் அவ்வகையிலான போராட்ட முன்னெடுப்புகளெல்லாம் பயனற்றுப்போக ஆயுத வழிமுறையில் இறங்கிய தமிழர்களின் புதிய தலைமுறைக்கு முண்டு கொடுத்துத் தீவிரமாக உழைக்கத் தொடங்கினார்.

தமிழினத்தின் எதிர்காலத்தை வென்று தரக்கூடியவரென எமது தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களைத் தீர்க்கதரிசனத்துடன் இனங்கண்டு அவரது எல்லாவகையான முன்னெடுப்புகளுக்கும் துணை நின்றார்.

எதிரியின் பாரியளவிலான அச்சுறுத்தலுக்கு எமது போராளிகள் உட்பட்டிருந்த வேளைகளில் மிகவும் நம்பிக்கைக்குரிய, செயலூக்கமும், இனப்பற்றும் உள்ள தேசப்பற்றாளர்களுள் ஒருவரான குலசேகரம் ஐயாவின் பணிகள் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் இன்றைய வளர்ச்சி நிலைக்கு உரமாக விளங்கின.

தனது உயிருக்கு மட்டுமல்ல தனது குடும்பத்தினரின் இருப்பிற்கே பெரும் ஆபத்து நிறைந்திருந்த காலங்களில் சிறிதும் ஐயங்கொள்ளாது, தேசத்திற்கான தனது பணிகளிலிருந்து பின்வாங்காது துணிகரமாக அவர் செயற்பட்டார். தேசியத் தலைவரின் செயற்பாட்டுக்கு உதவியாக இருந்து இத்தேசத்திற்கு வலுச் சேர்த்தார்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் போரின் பங்காளிகளுள் ஒருவராக நின்று உழைத்த குலசேகரம் ஐயா அவர்கள் போராட்டம் வளர்ந்து பெருவிருட்சமான பின்னரும், தனது நோயுற்ற உடலையும் பொருட்படுத்தாது தன்னால் இயன்ற உழைப்பை இத்தேசத்திற்குத் தொடர்ச்சியாக வழங்கிக் கொண்டே இருந்தார். தனது புதல்வன் ஒருவரை மாவீரராக அர்ப்பணித்து, இன்னொரு புதல்வியை போராளியாக்கியதோடு மட்டுமல்லாது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் நிதித்துறையினரின் வேலைத்திட்டங்களில் தானும் இணைந்து செயற்பட்டார்.

நோய்வாய்ப்பட்டு வீட்டிற்குள் முடங்கிவிட வேண்டிவந்த வேளையிலும் கூட அவர் தனது தேசப்பற்றில் சிறிதும் தளர்ச்சியுறாது செயற்பட்டு வந்தார். இவ்வாறு எமது இனத்திற்காக உழைத்தவர்களுள் ஒருவராகிய கந்தையா குலசேகரம் அவர்கள் எமைவிட்டுப் பிரிந்ததையிட்டு தமிழீழ தேசம் துயர்கொள்கிறது. மேலும் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும், குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக அவரது அளப்பரிய தேசப் பணிக்காக "நாட்டுப்பற்றாளர்" என்ற சிறப்பினை வழங்கி தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு அன்னாருக்குத் தனது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

### வீரச்சாவு....

வளை) என்ற போராளியே வீரச் சாவைத் தழுவிக்கொண்டார்.

இம்மாவீரருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### டி.சிவராம்....

தொடர்பில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் விவாதம் ஒன்று நடைபெறவுள்ளது.

பாராளுமன்ற கட்டடத்தில் நேற்று நடைபெற்ற கட்சி தலைவர்கள் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. இதற்கான யோசனையை தமிழ்தேசிய பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் சமர்ப்பித்தார். இதற்காக அவர் 9 காரணங்ளை தமது யோசனையில் உள்ளடக்கியுள்ளார்

### நோர்வே....

என அவர் குறிப்பிட்டார். இது ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் அவமானத்திற்குரிய விடயமாகும். என்றும் அவர் தெரிவித்தார். (32)

### பொதுக்....

விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு நேரடியாக நிதி வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட தொன்றல்ல என்பதை தெளிவாகக் கூறுகிறோம். இந்தக் கட்டமைப்பின் மூலம் அரசாங்கத்தின் நிர்வாகம் உறுதிப்படுத்தப்படாத பிரதேசங்களின் அபிவிருத்திக்கு நிதிவழங்க சந்தர்ப்பம் கிடைக்கும். உதவிகள் தவறான வழியில் செல்லுமென்ற அச்சமில்லாது உதவிகளை வழங்கச் சந்தர்ப்பம் கிடைக்கும் எனினும் அடிப்படையாகவுள்ள பிரச்சினைகளென்றால் விடுதலைப்புலிகள் போன்ற அமைப்புடன் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்வது யுத்தம் மூலமாகவா அல்லது அரசியல்ரீதியாகவா என்பது குறித்து தீர்மானமொன்று எடுக்க வேண்டும்.

பலவருடங்களாக யுத்தத்தினால் துன்பங்களை அனுபவிக்க நேர்ந்துள்ளதால் மோதலைவிட அரசியல் வழியில் நடத்தப்படும் பேச்சு வார்த்தைகளுக்கு அதிக விருப்பமுள்ளதை தெளிவாகக் காணக்கூடியதாகவுள்ளதை இங்கு கூறவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### பெரும்....

தன் படையணி தனிச்சிறப்பு வாய்ந்தது.

இற்றைக்குப் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன்னர், எமது போராட்ட வளர்ச்சிப் போக்கில் ஒரு முக்கிய வரலாற்றுத்திருப்பமாக இந்தப்படையணி பரிணமித்தது. இது எமது விடுதலைப்போராட்டத்திற்கு ஒரு புதிய பாதையை திறந்தது. மரபு வழிப் போர்முறையில் எமது இயக்கம் ஈட்டிய பரிணாமவளர்ச்சியையும் உயர் வடிவ விரிவாக்கத்தையும் இது குறித்து நின்றது.

இந்தப் படையணியை நான் உருவாக்கியதற்கு முக்கிய காரணம் இருக்கிறது. இரண்டாம் ஈழப்போர் அகோரமாக நடந்த காலமது. சிங்களப்படைகளின் பல்வேறு படையணிகள், பல்வேறு இடங்களில் பல்வேறு களங்களைத்திறந்தன. எமது மண்ணை ஆக்கிரமிக்க முனைப்போடு செயற்பட்ட காலகட்டமது. இந்த நிலையில் எதிரிப்படையணிகளின் வளர்ச்சிக்கேற்ப எம்மையும் மரபுப் படையணிகளாக வளர்த்துக் கொள்வது காலத்தின் கட்டாயம். அத்தோடு கெரில்லாப்பாணியிலான அதிரடித்தாக்குதல்களோடு நின்றுவிடாது, பாரிய கூட்டுப்படைத்தளங்களைத் தகர்த்தழித்தது. எமது போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த வேண்டிய நிர்ப்பந்தமும் எமக்கு எழுந்தது . இந்தச் சூழமைவில் தான் ஜெயந்தன் படையணியை நான் உருவாக்கினேன்.

கரும்புலி ஜெயந்தன் ஒரு சிறந்த மாவீரன். விடாமுயற்சி, துணிவு, தன்னம்பிக்கை, போர்த்திறன், எல்லாவற்றிற்கும் மேலாக தமிழீழ இலட்சியத்திற்காக தன்னுயிரை ஈகம் செய்யும் அலாதியான அர்ப்பணிப்பு, என எல்லாம் கலந்த ஒட்டுமொத்த உருவம் தான் இந்தக் கரும்புலிவீரன் . இந்தக் கரும்புலி வீரனது நினைவாகத்தான் இந்தப்படையணியை நான் உருவாக்கினேன். இந்த மாவீரனைப் போன்று, இப்படையணியும், போராளிகளும், தளபதிகளும் போர்க்கலையில்வல்லவர்கள்.அபாரமான துணிச்சல் கொண்டவர்கள். இவர்களின் இந்த உயர்ந்த போர்ப்பண்புகளுக்கு எதிரிபயப்படுகின்றான்.

ஜெயந்தன் படையணி அது தோற்றம் பெற்ற காலத்தில் இருந்தே எதிரியின் நிலைகள் மீது ஓயாது தணியாது இடைவிடாது தாக்குதல்களைத் தொடுத்தது. எதிரியின் முன்னணி பாதுகாப்பு நிலைகள், காவலரண்கள், இராணுவ வேலிகள் என அனைத்தையும் தொடர்ச்சியாக தாக்கியழித்து வெற்றி கண்டது. சிங்கள இராணுவத்தின் ரோந்து அணிகளை நிர்மூலமாக்கியது. தரையுடன் நிற்காது அடர்ந்த காட்டிலும் ஜெயந்தன் படையணியின் தாக்குதல்கள் விரிந்தன. கெரில்லாப்பாணியிலான தாக்குதலில் இருந்து மரபுவழிச்சமர் வரை ஜெயந்தன் படையணி சிறப்பாகச் செயலாற்றியது.

இந்தத் தாக்குதல்கள் எமது விடுதலை இயக்கத்திற்கு பெரும் வெற்றிகளை ஈட்டித்தந்தது. எதிரி இராணுவம் இந்தத் தாக்குதல்களால் என்றும் இல்லாத பேரழிவைச்சந்தித்தது. எதிரியின் படைப்பலத்தில் பாரிய சிதைவு ஏற்பட்டது. உயிரிழந்து ஊனமடைந்தவர்கள் ஒரு புறமிருக்க, மனமுடைந்து படையில் இருந்து விலகி ஓடியவர்களின் தொகையும் பெருகியது. ஜெயந்தன் படையணியுடன் நேரடி மோதல்களைத் தவிர்த்துக் கொள்வதிலேயே சிங்களப்படைகள் சிரத்தை எடுத்தன. இதனை ஜெயந்தன் படையணி ஈட்டிய மகத்தான போர்ச்சாதனை எனலாம்.

ஜெயந்தன் படையணியின் போராற்றலையும், இலட்சிய உறுதியையும் கடந்த ஆண்டின் முற்பகுதியில் உலகமே தன் கண்ணால் நேரடியாகக் கண்டது. மட்டக்களப்பு மண்ணிலே எமது போராட்டத்திற்கு எதிராக பெரும் துரோகம் நிகழ்ந்தபோது ஜெயந்தன் படையணி காட்டிய வீரமும் வெளிப்படுத்திய கொள்கைப் பற்றும் என்றுமே பாராட்டுக்குரியவை. சரியான நேரத்தில், சரியான இடத்தில் தனித்து நின்று துல்லியமாகத் தாக்கி துரோகத்தை முறியடித்து, எமது மண்ணையும் எமது மக்களையும் எமது போராளிகளையும் மீட்டெடுத்தது. எமது விடுதலைப் போராட்டத்தையும் பேரழிவில் இருந்து காத்து, புலிகள் இயக்கத்தின் பேராற்றலையும் இலட் உறுதிப்பாட்டையும் உலகிற்கு ]சாற்றியது.

கடந்த ]னிரெண்டு ஆண்டுகளில் ஜெய ன் படையணி நிகழ்த்திய தாக்குதல்களும் புரிந்த சமர்களும் போரியல் வரலாற்றிற்கு பெருமை சேர்ப்பன. இதற்கு இந்தப் படையணியில் இருந்து களமாடி வீழ்ந்த வீரமறவர்கள் புரிந்த தியாகங்களும் நிகழ்த்திய சாதனைகளுமே அடிப்படையானவை . இந்த வீர மறவர்களின் நினைவுகளோடு அவர்களின் வழித்தடங்களில் விரைந்து செல்லும் ஜெயந்தன் படையணி தனது விடுதலைப்பாதையில் விரைந்து முன்னேறிச் செல்ல எனது வாழ்த்துக்கள். அத்தோடு படையணியின் பன்னிரெண்டாவது ஆண்டு நிகழ்வு சிறப்புறவும் எனது ஆசிகள்.

# சாவு அறிவித்தல்

15.09.1991 அன்று மணலாற்றுப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட மின்னல் நடவடிக்கையின்போது விழுப்புண் அடைந்து சிகிச்சை பெற்றுவந்தபோது 03.05.2005அன்று போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**மேஜர்-குலம்**

**(யோகராசா-பாஸ்கரன்)**

பழம்பாசி,நெடுங்கேணி, முல்லைத்தீவு.

கணுக்கேணிமேற்கு, தண்ணீரூற்று, முள்ளியவளை.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், போராளிகள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(சி.11860)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 05ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது